**மாமன்றக் கூட்டம்**

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 7389/2021/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **26.10.2021 பிற்பகல் 4.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொள்வோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

## பொருள் எண் 1

பார்வை
1 அரசாணை எண்.237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.26.09.1996
2 அரசாணை எண்.179, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.05.10.2009
3 அரசாணை (நிலை) எண்.97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 4) துறை நாள்.03.08.2016
4 இதே எண்ணிட்ட இவ்வலுவலக குறிப்பாணை நாள்.21.06.2021

----

தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996ம் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் வகுப்பு – II வகை – 3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு வகுப்பு – III, பிரிவு – I வகை 1 மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களின் பணிமூப்பு பட்டியலின்படி நிரப்பலாம்.

இம்மாநகராட்சியில் உதவி ஆணையாளர் (கணக்குகள்) ஆக பணிபுரிந்து வரும் திரு.தி.ரா. ரவி அவர்கள் 30.06.2018 அன்று ஓய்வு பெறும் நிலையில் தனியருக்கு பணி நீட்டிப்பு வழங்கப்பட்ட காலம் 30.06.2021 அன்று முடிவடைந்த நிலையில் அன்றே ஓய்வு பெற்று விட்டார். அதனால் ஏற்படும் காலி பணியிடமான உதவி ஆணையாளர் பணியிடத்தை பூர்த்தி செய்யும்பட்சத்தில் ஒரு நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பணிமூப்பு பட்டியலில் உள்ளவர்களில் வரிசை எண்.1ல் உள்ள திருமதி.தே. லட்சுமிபிரபா, கணக்கு அலுவலர் (குவி) அவர்கள் தனக்கு உதவி ஆணையாளர் பதவி உயர்வு வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அடுத்த வரிசை எண்.2ல் உள்ள தகுதி வாய்ந்த கீழ்க்கண்ட அலுவலருக்கு பதவி உயர்வு வழங்கலாம்.

| வ.எண். | பெயர் | கணக்கு அலுவலர் பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.வி. லட்சுமணன்<br>கணக்கு அலுவலர் (பி.எப்) | 04.01.2016 |

அப்பணியிடத்தை பூர்த்திசெய்யும் பட்சத்தில் அதனால் ஏற்படும் காலிப்பணியிடமான நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர்களின் பணிமூப்பு பட்டியலின்படி நிரப்பலாம்.

பார்வை 2ல் காணும் அரசாணையில், நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்க கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் 2 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

01.01.2021ம் தேதிய கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.1 ல் உள்ள கீழ்க்கண்ட அலுவலர் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பதவியில் 2 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வருகிறார். இவர் மீது குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை. எனவே நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்க 01.01.2021ம் தேதிய நிலவரப்படி கீழ்க்கண்ட பணியாளரின் பெயரை 01.04.2021க்கான தேர்ந்த பெயர்ப்பட்டியலில் சேர்க்கலாம்.

மேலும் அரசின் உறுதியாக்கம் பெற்றவுடன் நிர்வாக / கணக்கு அலுவலர் பணியிடத்திற்கான ஊதியம் PAY MATRIX - PB 2 Level 20 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து வழங்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளலாம்.

| வ.எண். | பெயர்<br>திருமதி / திரு | கண்காணிப்பாளர் / உ.வ.அ.<br>பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | எஸ்.பி. செந்தில்,<br>கண்காணிப்பாளர் | 01.03.2012 |

மேலும் வகுப்பு II, வகை 3 & 4ல் உள்ள நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க 01.04.2021க்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.1 89 /2021/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 464 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய்ப் பிரிவு - வரியில்லா இனங்கள் - மாநகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்கள் - பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - திருத்திய வைப்புத் தொகை நிர்ணயம் செய்வது - மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

**பார்வை :** ஆணையர் அவர்களின் முன்அனுமதி நாள். 18.09.2021

---

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வரியில்லா இனங்களில் மாநகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்கள் அனைத்தும் அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை நாள். 25.05.2009ன்படி, பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒருமுறை ஏலம் விடப்பட்டு குத்தகை இனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகை உயர்வும் செய்யப்படுகிறது. மூன்றாண்டுகள் முடிவடைந்தபின் மேற்படி இனங்களை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்யப்பட்டு, மறுஏலத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, இம்மாநகராட்சியில் 48 வருடாந்திர குத்தகை இனங்கள் ஏலம் விடப்பட வேண்டிய நிலையில் உள்ளது. மேற்படி இனங்களை ஏலம் விட கீழ்க்கண்ட தேதிகளில் ஏலம் நடத்திட செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

| 2018-19 | 2019-20 | 2020-21 |
|---|---|---|
| 20-04-2018 | 13-02-2019 | 06-03-2020 |
| 18-07-2018 | 24-02-2019 | 23-10-2020 |
| 25-10-2018 | 14-08-2019 | 29-12-2020 |
| 28-12-2018 | | |

கடந்த மூன்றாண்டுகளாக, மேற்குறிப்பிட்ட தேதிகளில் ஏலம் நடத்தியும், மேற்படி 48 வருடாந்திர குத்தகை இனங்களை ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.

எனவே, மேற்கொண்டு இம்மாநகராட்சிக்கு ஏற்படும் தொடர் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும், ஏல நிபந்தனைகளை எளிமைப்படுத்தும் வகையிலும், தற்போது வசூலிக்கப்படும் வைப்புத்தொகை, காப்புத்தொகை மற்றும் சொத்து மதிப்பு சான்றிதழுக்கு பதிலான தொகை ஆகியவற்றின் கூடுதல் தொகையில் 50%ஐ திருத்திய வைப்புத்தொகையாக நிர்ணயம் செய்யலாம். மேலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள இதர பொது மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகள் அனைத்து பொருந்தும்.

| **வ. எண்** | **குத்தகை இனங்கள்** | **வைப்புத் தொகை, காப்புத்தொகை &சொத்து மதிப்பு சான்றிதழுக்கு பதிலான தொகை(ரூ.)** | **தற்போது நிர்ணயம் செய்யப்படும் வைப்புத் தொகை (ரூ.) (கலம் 3ன் 50%)** |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| **கிழக்கு மண்டலம்** | | | |
| 1 | சிங்காநல்லூர் வாரச்சந்தை கட்டண வசூலிக்கும் உரிமம் | 2,75,000/- | 1,37,500/- |
| 2 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில், பொருள் பாதுகாப்பு அறை | 1,50,000/- | 75,000/- |
| 3 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில், வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 4,00,000/- | 2,00,000/- |
| 4 | புலியகுளம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | 1,20,000/- | 60,000/- |
| 5 | சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை கட்டண வசூலிக்கும் உரிமம் | 3,00,000/- | 1,50,000/- |
| 6 | மாநகராட்சி மருதூர் திருமண மண்டபம் | 2,00,000/- | 1,00,000/- |
| **மேற்கு மண்டலம்** | | | |
| 7 | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 4,75,000/- | 2,37,500/- |
| 8 | வடவள்ளி வாரசந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 60,000/- | 30,000/- |
| 9 | வடவள்ளி தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 60,000/- | 30,000/- |
| 10 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் தரை தளத்தில் உள்ள ஆண்கள் பெண்கள் நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,25,000/- | 62,500/- |
| 11 | மேட்டுப்பாளையம் ரோடு MGR மொத்தக் காய்கறி மார்க்கெட் இரண்டு கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,25,000/- | 62,500/- |
| 12 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 5,00,000/- | 2,50,000/- |
| 13 | கவுண்டம்பாளையம் ஆடு அறுமனை கட்டண வசூலிக்கும் உரிமம் | 60,000/- | 30,000/- |
| 14 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையம், பேருந்து நுழைவுக் கட்டணம் வசூல் மற்றும் குளீருட்டப்பட்ட ஆண்கள் மற்றும் ஓய்வறை கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 5,00,000/- | 2,50,000/- |
| 15 | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,25,000/- | 62,500/- |

| | | | |
|---|---|---|---|
| 16 | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 5,75,000/- | 2,87,500/- |
| | **தெற்கு மண்டலம்** | | |
| 17 | உக்கடம் ஆடு அறுவை மனை கட்டண வசூலிக்கும் உரிமம் | 4,25,000/- | 2,12,500/- |
| 18 | தால் பேக்டரி கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 85,000/- | 42,500/- |
| 19 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதன கிடங்கு | 85,000/- | 42,500/- |
| | **வடக்கு மண்டலம்** | | |
| 20 | கணபதி கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,25,000/- | 62,500/- |
| 21 | துடியலூர் வாரச் சந்தை சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 3,50,000/- | 1,75,000/- |
| 22 | வார்டு எண்.42 திருமலை நகர் உள்விளையாட்டு அரங்கம் | 3,50,000/- | 1,75,000/- |
| 23 | வார்டு எண்.1 துடியலூர் நவீன கட்டண கழிப்பிடம் | 1,25,000/- | 62,500/- |
| 24 | பாப்பநாயக்கன்பாளையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,25,000/- | 62,500/- |
| | **மத்தியம் மண்டலம்** | | |
| 25 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் - அறை எண் 4ஐ தவிர) | 5,50,000/- | 2,75,000/- |
| 26 | உக்கடம் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம். | 1,25,000/- | 62,500/- |
| 27 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 1,50,000/- | 75,000/- |
| 28 | சீனிவாசபுரம் கல்யாண மண்டபம் பராமரிக்கும் உரிமம். | 5,00,000/- | 2,50,000/- |
| 29 | புலியகுளம் திருமண மண்டபம் பராமரிக்கும் உரிமம் | 5,00,000/- | 2,50,000/- |
| 30 | சத்திரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,000/- | 1,00,000/- |
| 31 | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம். | 1,25,000/- | 62,500/- |
| 32 | ஆம்னி பேருந்து நிலையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,00,000/- | 1,50,000/- |
| 33 | அவினாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2,00,000/- | 1,00,000/- |
| 34 | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,00,000/- | 1,50,000/- |

| | | | |
|---|---|---|---|
| 35 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 3,00,000/- | 1,50,000/- |
| 36 | சிவானந்த காலனி அறிவியல் பூங்கா கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000/- | 50,000/- |
| 37 | வ.உ.சி,பூங்கா மிருகக் காட்சி சாலை மற்றும் சிறுவர் விளையாடும் இடம் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 5,00,000/- | 2,50,000/- |
| 38 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் புதிய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2,50,000/- | 1,25,000/- |
| 39 | தியாகி குமரன் மார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,75,000/- | 87,500/- |
| 40 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் 1,2,3 மற்றும் 4 ஆகிய தளங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,75,000/- | 1,37,500/- |
| 41 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 5,00,000/- | 2,50,000/- |
| 42 | டவுன்ஹால் நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,50,000/- | 1,25,000/- |
| 43 | வ.உ.சி. பூங்கா சிறுவர் இரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,25,000/- | 62,500/- |
| 44 | வ.உ.சி. பூங்கா வளாகம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,50,000/- | 75,000/- |
| 45 | உக்கடம் பேருந்து நிலையத்தில் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 2,50,000/- | 1,25,000/- |
| 46 | உக்கடம் பேருந்து நிலையத்தில் பொருள் காப்பகம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 1,25,000/- | 62,500/- |
| 47 | லிங்கப்ப செட்டி வீதி நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,50,000/- | 75,000/- |
| 48 | உப்பிலிப்பாளையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,75,000/- | 87,500/- |

மேற்கண்டவாறு திருத்திய வைப்புத் தொகைகளை நிர்ணயம் செய்வது தொடர்பாக, 18.09.2021ம் தேதி பெறப்பட்ட முன்அனுமதிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.12267/2018/எம்.ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 465 நாள் 26.10.2021**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் உரிம காலம் 3 ஆண்டுகள் மற்றும் 6 ஆண்டுகள் முடிவுற்ற வணிக வளாக கடைகளுக்கு 15% உயர்வு செய்து உரிம புதுப்பித்தல் தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண். 92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1-ல் காணும் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007-ன்படி 01.04.2021 முதல் 15% வாடகை உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யும் பட்டியல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**சிறுவாணி ரோடு (வார்டு எண். 15)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஏடுத்த நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1500003 | 3 | எ. மோகன் ராஜ் | 01.03.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2023 | 5,600/- | 6,440/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**வடவள்ளி புதிய பேருந்து நிலைய திருப்பு முனையம் (வார்டு எண். 16)**

| வ. எ ண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஏடுத்த நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகைரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1620551 | 1 | பி.சதீஸ் | 16.12.2018 | 31.12.2021 | 01.01.2022 | 31.12.2024 | 6,240/- | 7,176/- |
| 2 | 1620552 | 2 | ஆர். சந்திரசேகர் | 16.12.2018 | 31.12.2021 | 01.01.2022 | 31.12.2024 | 6,310/- | 7,257/- |
| 3 | 1620553 | 3 | ஜி. கார்த்திக் | 16.12.2018 | 31.12.2021 | 01.01.2022 | 31.12.2024 | 3,600/- | 4,140/- |
| 4 | 1620554 | 4 | ஆர். சந்தோஷ் குமார் | 16.12.2018 | 31.12.2021 | 01.01.2022 | 31.12.2024 | 6,450/- | 7,418/- |
| 5 | 1620555 | 5 | வி. சரவணகுமார் | 16.12.2018 | 31.12.2021 | 01.01.2022 | 31.12.2024 | 6,200/- | 7,130/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மார்க்கெட் –20 x 10 = 200 ச.அடி (வார்டு எண். 22 )**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஏடுத்த நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை ரூ. | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2220607 | 9 | குமார் | 01.12.2017 | 30.11.2020 | 01.12.2020 | 30.11.2023 | 47,800/- | 54,970/- |

**3 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**இராமசந்திரா ரோடு 10 x 16=160 சதுரடி (வார்டு எண். 23)**

| வ. எ ண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | உரிமம் ஏடுத்த நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 230305 | 5 | தீபக் குமார் | 01.04.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2024 | 20,585/- | 23,673/- |
| 2 | 230313 | 11 | டி. மணிகண்டன் | 01.10.2018 | 31.09.2021 | 01.10.2021 | 30.09.2023 | 13,500/- | 15,525/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**ராமலிங்க நகர் கிராஸ் 1 53 *76=4028 சதுரடி (வார்டு எண். 12)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | 3 ஆண்டுகள் முடிவுற்ற நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை ரூ. | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1220606 | 1 | T.N.Civil Suppries Corpn | 01.04.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2024 | 14,228/- | 16,362/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**மருதமலை அடிவாரம் 10 *8=80 சதுரடி (வார்டு எண். 16)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | 3 ஆண்டுகள் முடிவுற்ற நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை ரூ. | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1620611 | 1 | ஞானவேல் | 01.04.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2024 | 8,050/- | 9,258/- |
| 2 | 1620612 | 2 | அமர்சிங் | 01.04.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2024 | 7,705/- | 8,861/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**பெரியசாமி ரோடு –160 ச.அடி (வார்டு எண்.23)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | 3 ஆண்டுகள் முடிவுற்ற நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2320529 | 1 | எஸ்.கிருஷ்ணன் | 01.04.2017 | 30.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 15691/- | 18,045/- |
| 2 | 2320530 | 2 | எஸ்.வேலுசாமி | 01.04.2017 | 30.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 15525/- | 17,854/- |
| 3 | 2320531 | 3 | எஸ்.வேலுசாமி | 01.04.2017 | 30.03.2020 | 01.04.2020 | 31.03.2023 | 15525/- | 17,854/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**சுப்பிரமணியம் ரோடு –2441.25 ச.அடி (வார்டு எண்.24)**

| வ. எண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | 3 ஆண்டுகள் முடிவுற்ற நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2420367 | 1 | COIMBATORE SPASTIC TRUST | 01.04.2013 | 31.03.2016 | 01.04.2016 | 31.03.2019 | 20000/- | 23000/- |
| | | | | | 31.03.2019 | 01.04.2019 | 31.03.2022 | 23000/- | 26450/- |

**6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகள்**

**ஆரோக்கியசாமி ரோடு சாஸ்திரி மைதானம் அருகில் –160 ச.அடி (வார்டு எண்.24)**

| வ. எ ண் | வ.வி. எண் | கடை எண் | பெயர் | 3 ஆண்டுகள் முடிவுற்ற நாள் | உரிம காலம் முடியும் நாள் | உரிமம் புதுப்பிக்க பட வேண்டிய நாள் | உரிம காலம் முடியும் நாள் | தற்போது உள்ள மாத வாடகை | அரசுஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி குறைந்தபட்சம் 15% உயர்வு செய்த மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 240005 | 5 | அம்மா அமுதம் பல்பொருள் அங்காடி | 01.10.2018 | 30.09.2021 | 01.10.2021 | 30.09.2024 | 10,350/- | 11,905/- |
| 2 | 240005 | 6 | அம்மா அமுதம் பல்பொருள் அங்காடி | 01.10.2018 | 30.09.2021 | 01.10.2021 | 30.09.2024 | 10,350/- | 11,905/- |
| 3 | 240013 | 13 | W. நவீன் ஜான் | 01.12.2018 | 30.11.2021 | 01.12.2021 | 30.11.2024 | 13,110/- | 15,076/- |
| 4 | 240015 | 15 | ஆர்.பரமசிவம் | 01.08.2014 | 31.07.2017 | 01.08.2017 | 31.07.2021 | 16200/- | 18630/- |
| 5 | 240021 | 21 | வினு கே நாராயணன் | 01.10.2018 | 30.09.2021 | 01.10.2021 | 30.09.2024 | 15,050/- | 17,308/- |
| 6 | 240038 | 38 | சண்முகவடிவு | 01.04.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2024 | 17,100/- | 19,665/- |
| 7 | 240039 | 39 | எம்.பிரபு | 01.04.2018 | 31.03.2021 | 01.04.2021 | 31.03.2024 | 19,900/- | 22,885/- |

மேற்படி 3 ஆண்டுகள் மற்றும் 6 ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு மாத வாடகையில் 15 % சதவீதம் உயர்வு செய்யலாம். கடையின் புதுப்பித்தல் கட்டணமும் செலுத்தி ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் ஒப்பந்தப் பத்திரமும் பூர்த்தி செய்து ஒப்படைக்கவும் உயர்வு செய்த வாடகைக்கு ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டு வரவும், ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5579/2021/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 466 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

| | | |
|---|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம்- வார்டு எண் 55 செங்காடு வணிக வளாக கடை எண். 7,8 மற்றும் 9 ஆகிய மூன்று கடைகள் ஒப்படை செய்யப்பட்டது - ~~31.03.2019~~ ல் உரிமக் காலம் முடிவுற்றது – உரிமக் கட்டணம் புதுப்பித்தல் – உரிம நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி கோருதல் – தொடர்பாக | |
| பார்வை: | 1. | அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.03.07.2007 |
| | 2 | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் க.எண்.உ.செ.பொறி/வி/பா.நா.பாளையம்/கோ.வா/அ.எண்.201/20-21 நாள். 04.03.2021 மற்றும் 09.06.2021. |

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.55 செங்காடு மாநகராட்சி வணிக வளாக கடை எண் 7, 8 மற்றும் 9 ஆகிய மூன்று கடைகள் உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது வரை இயங்கி வருகிறது.

பார்வை(1)யில் காணும் அரசாணையில் மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் உரிமகட்டணம் உயர்வு செய்ய வேண்டும் எனவும், ஒன்பது ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் உரிம கட்டணம் மறுநிர்ணயம் செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(2)ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் அரசாணை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை நாள். 03.07.2007ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55 செங்காடு பாப்பநாயக்கன்பாளையம், தமிழ்நாடு மின்சார வாரியம் எண் 7, 8 மற்றும் 9 ஆகிய மூன்று கடைகளுக்கு உரிம எண். 5510014, 5510015 மற்றும் 5510016-**க்கு** உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாதாந்திர உரிமக்கட்டணம் ரூ.7643/- அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்ட நாள் முதல், மேற்படி கடையின் உரிம காலம் 31.03.2019-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது.

பார்வை(4)ல் காணும் கோவை மின் பகிர்மான வட்டம்/ மாநகர்/பா.நா.பாளையம் உப கோட்ட பிரிவு அலுவலகம் இயங்கி வரும் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 7, 8 மற்றும் 9 ஆகிய மூன்று கடைகளுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பொது மக்களின் சேவைக்காக செயல்பட்டு வருவதால் வாரிய விதிமுறைகளின்படி புதுப்பித்தல் கட்டணம் செலுத்த இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வார்டு எண். 55. செங்காடு மாநகராட்சி வணிக வளாக கடை எண் 7, 8 மற்றும் 9 ஆகிய மூன்று கடைகளில் இயங்கிவரும் உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகத்திற்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிம கட்டணம் உயர்வு செய்து உரிம நீட்டிப்பு செய்ய சம்மதம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளார்கள்.

| கடை எண் | பெயர் | தற்போதைய உரிம கட்டணம் | 15% உயர்வு செய்யப் பட்ட உரிம கட்டணம் | உரிமம் முடிவடைந்த காலம் | உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 7 | உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம்(5510014) | 7643 | 8789 | 31.03.2019 | 01.04.2019 முதல் 31.03.2022 முடிய |
| 8 | உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம்(5510015) | 7643 | 8789 | 31.03.2019 | 01.04.2019 முதல் 31.03.2022 முடிய |
| 9 | உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம்(5510016) | 7643 | 8789 | 31.03.2019 | 01.04.2019 முதல் 31.03.2022 முடிய |

எனவே அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.03.07.2007ன்படி 01.04.2019 முதல் 31.03.2022 வரையிலான காலங்களுக்கு தற்போதைய உரிம கட்டணத்தில் 15 சதவீதம் உயர்வு செய்து உரிம நீட்டிப்பு செய்யவும் வித்தியாச தொகை வசூல் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்** **ந.க.எண்**.8860/2013/**அ**1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 467 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி– ஐந்து மண்டலங்களில் 60 வார்டு பகுதிகளில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக LED விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றப்பட்டதில் பழைய மற்றும் பயனற்ற நிலையிலுள்ள குழல் மற்றும் சோடியம் ஆவிவிளக்குகள் (வரிசை எண் 1–7) முதன்முறையாக 01/09/2021ம் தேதி பொது ஏலம் நடத்தப்பட்டுள்ளது. அன்று காலை 11.00 மணிக்கு நிர்வாகப்பொறியாளர் (கிழக்கு) அவர்களின் முன்னிலையில் பொது ஏலம் நடத்தப்பட்டது. அவற்றில் திரு.முத்துவேல் மற்றும் தி/எ். ஜென்ரல் இன்விரோ டெக் பிரைவேட் லிமிடெட் என்கின்ற இரண்டு நிறுவனங்கள் நேரடியாக பொது ஏலத்தில் கலந்து கொள்ளப்பட்டது. அதில் திரு. முத்துவேல் என்பவர் ஏல முன்வைப்பு தொகை ரூ. 62,000/–ஐ (DD No. 988657 நாள் 31.08.2021) வரைவோலையாக செலுத்தியுள்ளார் மற்றும் தி/எ். ஜென்ரல் இன்விரோ டெக் பிரைவேட் லிமிடெட் என்கின்ற நிறுவனம் ஏல முன்வைப்பு தொகை ரூ. 62,000/–ஐ (DD No. 917499 நாள் 31.08.2021) வரைவோலையாக செலுத்தியுள்ளார்.

இதே பணிக்கு ஒப்பந்தப்புள்ளியும் 01.09.2021ம் தேதியன்று கோரப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு நிர்வாகப்பொறியாளர் (கிழக்கு) அவர்களின் தலைமையில் ஒப்பந்த ஏலப்படிவ உறைகள் திறக்கப்பட்டது. அவற்றில் மூன்று நிறுவனங்கள் கலந்துக் கொள்ளப்பட்டுள்ளது அதன் விபரங்கள் பின்வருமாறு:

1. தி/எ்.காமாட்சி எலக்ரிக்கல்ஸ், கோயம்புத்தூர்
2. தி/எ். குளோபல் ஸ்டீல்ஸ், சென்னை
3. தி/எ். ஜென்ரல் இன்விரோ டெக் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்

**மேற்கூறிய ஐந்து நிறுவனங்களின் ஏலஒப்பீடு கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

| வ. எண். | விளக்குகள் | எண்ணிக்கை | மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகை ஒன்றிற்கு (ரூ.) | திரு.முத்துவேல் | தி/எ். ஜென்ரல் இன்விரோ டெக் பிரைவேட் லிமிடெட் | | தி/எ்.காமாட்சி எலக்ரிக்கல்ஸ் | தி/எ். குளோபல் ஸ்டீல்ஸ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இறுதி ஏலத் தொகை (நேரடியாக ) ஒன்றிற்கு (ரூ) | இறுதி ஏலத் தொகை (நேரடியாக) ஒன்றிற்கு (ரூ) | இறுதி ஏலத் தொகை (ஏலப்படிவ உறை) ஒன்றிற்கு (ரூ) | இறுதி ஏலத் தொகை (ஏலப்படிவ உறை) ஒன்றிற்கு (ரூ) | இறுதி ஏலத் தொகை (ஏலப்படிவ உறை) ஒன்றிற்கு (ரூ) |
| 1 | 20W TBL | 98 | 30.00 | 31 | 30 | 28 | 28 | 33 |
| 2 | 40W TL | 9212 | 30.00 | 31 | 30 | 28 | 30 | 33 |
| 3 | 24W CFL | 10055 | 45.00 | 44 | 42 | 42 | 43 | 46 |
| 4 | 70W SVL | 23191 | 80.00 | 72 | 70 | 65 | 70 | 80 |
| 5 | 150W SVL | 103 | 160.00 | 157 | 158 | 150 | 153 | 161 |
| 6 | 250W SVL | 14640 | 210.00 | 185 | 182 | 170 | 180 | 212 |
| 7 | 400W SVL | 1579 | 310.00 | 280 | 277 | 270 | 280 | 312 |
| Total | | | 6167425.00 | 5567473.00 | 5443117.00 | 5120985.00 | 5427918.00 | 6237951.00 |
| IT 2% | | | 123348.50 | 111349.46 | 108862.34 | 102419.70 | 108558.36 | 124759.02 |
| GST 18% | | | 1110136.50 | 1002145.14 | 979761.06 | 921777.30 | 977025.24 | 1122831.18 |
| Net Total | | | 7400910.00 | 6680967.60 | 6531740.40 | 6145182.00 | 6513501.60 | 7485541.20 |

மேற்கண்ட நிறுவனங்களான திரு.முத்துவேல், தி/ள். ஜென்ரல் இன்விரோ டெக் பிரைவேட் லிமிடெட், தி/ள்.காமாட்சி எலக்ரிக்கல்ஸ் மற்றும் தி/ள். குளோபல் ஸ்டீல்ஸ் ஆகிய நிறுவனங்களின் ஏலத்தை ஒப்பீடு செய்யப்பட்டதில் பழைய மற்றும் பயனற்ற நிலையிலுள்ள தெருவிளக்குகள் வரிசை எண்.1 முதல் 7 வரையிலான இனங்களின் மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகையை விட உச்சப்பட்ச ஏலத்தொகையினை தி/ள். குளோபல் ஸ்டீல்ஸ், எண்.**484/263/15**, திருவள்ளுவர் வீதி, பாலாஜி நகர், அம்பத்தூர், சென்னை–**600053** என்ற நிறுவனம் கோரி அதற்கான ஏலத்தொகையாக ரூ.**62,37,951/–** ரூ.**1,24,759.02/–** (IT 2%) மற்றும் ரூ.**11,22,831.18/–** (GST 18%) உட்பட மொத்த ஏலத் தொகையாக ரூ.**74,85,541.20/–** (ரூபாய் எழுபத்தி நான்கு லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து ஐந்நூற்றி நாற்பத்தியொன்று ரூபாய் மற்றும் இருபது பைசா மட்டும்) வரைவோலையாகவோ அல்லது மாநகராட்சி கருவூலத்தில் ரொக்கமாகவோ செலுத்தப்பட வேண்டும். அதன்பின்னர் வரிசை எண்.**1** முதல் **7** வரையிலான பழைய மற்றும் பயனற்ற நிலையிலுள்ள தெருவிளக்குகளை தி/ள். குளோபல் ஸ்டீல்ஸ், எண்.**484/263/15**, திருவள்ளுவர் வீதி, பாலாஜி நகர், அம்பத்தூர், சென்னை–**600053** என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.**1487/2021**/எம்டி**3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 468 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி-தெற்கு மண்டலம்-வார்டு எண்.91, சுகுணாபுரம் மேற்கு இட்டேரி வீதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

பார்வை : 1. உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்களது குறிப்பு நாள்.02.08.2020.

------------

பார்வையில் காணும் உதவி செயற்பொறியாளர் குறிப்பில் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.91, சுகுணாபுரம் மேற்கு இட்டேரி வீதியில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.149.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 5863.12 சதுர அடியில் சமுதாயக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.5,600/- வாடகையாக நிர்ணயம் செய்யலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள விபரப்படி சுகுணாபுரம் மேற்கு இட்டேரி வீதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.5,600/- என்ற வாடகையினை நிர்ணயம் செய்ய மன்றப் பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: - அனுமதிக்கலாம் ந.க.எண்.5817/2021/அ1(தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 469 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள சேதம் அடைந்த உபயோகமற்ற தளவாடங்களின் பட்டியல் அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்களின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த உபயோகமற்ற தளவாடங்களின் மதிப்பை நிர்ணயம் செய்யும் பொறுட்டு உதவி ஆணையாளர் (வருவாய்) தலைமையில் அனைத்து மண்டல உதவி நிர்வாகப் பொறியாளர்கள் கொண்ட குழு அமைக்கவும், மேற்படி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உபயோகமற்ற தளவாடங்களை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி பகிரங்க ஏலம் விடுவதற்கும், அதற்கான அறிவிப்பு விளம்பரத்தினை பத்திரிக்கையில் விளம்பரம் செய்வதற்கு ஏற்படும் விளம்பர செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| Sl. No | Materials | Total |
|---|---|---|
| 1 | Steel Bench | 212 |
| 2 | Steel Desk | 275 |
| 3 | Wooden Bench | 130 |
| 4 | Wooden Desk | 67 |
| 5 | Table steel | 38 |
| 6 | Table Wood | 12 |
| 7 | Chair steel | 28 |
| 8 | Chair Wood | 17 |
| 9 | Chair Plastic | 6 |
| 10 | Bureau Wood | 3 |
| 11 | Others | 149 |
| 12 | Steel Desk with Bench | 10 |
| 13 | Wooden Box | 30 |
| 14 | S type Chair | 8 |
| 15 | Round Table | 12 |
| 16 | Wooden Table | 8 |
| 17 | Bamboo partition | 1 |
| 18 | Steel Desk and Bench | 62 |
| 19 | Steel table | 2 |
| 20 | Chair | 16 |
| 21 | Broken chair | 20 |
| 22 | Play materials | 4 |
| 23 | Baby Chair | 10 |
| 24 | Wheel Chair | 1 |
| 25 | water doctor | 17 |
| 26 | Steel Ramp | 1 |
| 27 | School Name Board | 1 |
| 28 | Steel Rack | 2 |
| 29 | Paint Bucket | 28 |
| 30 | Wooden Window | 2 |
| 31 | Wooden Door | 3 |
| 32 | MS pipes | 32 |
| 33 | Steel Sheet | 6 |
| 34 | Garbage box | 1 |
| 35 | old computer | 12 |
| 36 | Xerox Machine | 1 |
| 37 | TV | 4 |
| 38 | Damaged unusable battery | 1 |
| 39 | Monitor | 11 |
| 40 | Keyboard | 10 |
| 41 | printer | 2 |
| 42 | speaker | 6 |
| 43 | CPU | 13 |
| 44 | mouse | 10 |
| 45 | UPS | 2 |
| 46 | Battery | 31 |
| 47 | Sintex | 2 |
| | Total | 1319 |

**அலுவலகக்குறிப்பு :** அனுமதிக்கலாம் ந.க.எண்.1709/2018/எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 470 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

| | |
|---|---|
| **பொருள் :** | வருவாய் பிரிவு - கோயம்புத்தூர் மாநகராட்சி - வரியில்லா இனங்கள் - மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் - கேட்பு நீக்கம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |

----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வரியில்லா இனங்களில், கிழக்கு, வடக்கு மற்றும் மத்திய மண்டலம் நீங்கலாக, இதர மண்டலங்களில் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட மாதாந்திர வாடகை கடைகளுக்கு பல்வேறு காரணங்களுக்காக கேட்பு நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளன.

சம்பந்தப்பட்ட மண்டல வரிவசூலர்கள் மற்றும் உதவி வருவாய் அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டும், சம்பந்தப்பட்ட மண்டல உதவி ஆணையாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டும், தங்களது மண்டலத்திற்குட்ட கேட்பு நீக்கம் செய்யப்பட வேண்டிய மாதாந்திர வாடகை கடைகளை பட்டியலிட்டு, மண்டலம் வாரியாக கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | வார்டு எண் | கடை அமைந்துள்ள இடம் /வணிக வளாகத்தின் பெயர் | கடை எண் | வரிவிதிப்பு எண் | நிலுவை காலம் | கேட்பு நீக்கம் செய்ய வேண்டியதற்கான காரணம் | நிலுவை கேட்பு மற்றும் நீக்கம் செய்ய வேண்டிய தொகை.ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **மேற்கு மண்டலம்** | | | | | | | |
| 1 | 9 | பிரபு நகர் | 1 | 920535 | 2014-2015 - 3 2019-2020 - 7 | 2019-2020 வரை இக்கடைகள் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 2,53,960/- |
| 2 | | | 3 | 920537 | 2015-2016-10 - 2019-2020- 7 | 2019-2020 வரை இக்கடைகள் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 2,28,607/- |
| 3 | | | 7 | 920541 | 2014-2015 - 11 - 2019-2020- 7 | 2019-2020 வரை இக்கடைகள் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 1,34,113/- |
| 4 | 16 | வடவள்ளி பேருந்து முனைய மாநகராட்சி வணிக வளாக கடைகள் | 1 | 1620545 | 2016-2017-11 - 2017-2018- 2 | 2017-2018 ல் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக கடை கட்டி ஏலம் விடப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 1,35,267/- |
| 5 | | | 2 | 1620546 | 2016-2017-8 - 2017-2018- 2 | 2017-2018 ல் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக கடை கட்டி ஏலம் விடப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 1,50,673/- |
| 6 | | | 3 | 1620547 | 2015-2016-3 - 2017-2018- 2 | 2017-2018 ல் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக கடை கட்டி ஏலம் விடப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 3,16,976/- |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 4 | 1620548 | 2016-2017-7 - 2017-2018- 2 | 2017-2018 ல் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக கடை கட்டி ஏலம் விடப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 2,89,815/- |
| 8 | 16 | வடவள்ளி பேருந்து முனைய மாநகராட்சி வணிக வளாக கடைகள் | 5 | 1620549 | 2016-2017-6 - 2017-2018- 2 | 2017-2018 ல் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக கடை கட்டி ஏலம் விடப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 75,691/- |
| 9 | | | 6 | 1620550 | 2017-2018- 4 2017-2018- 2 | 2017-2018 ல் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்காக பழைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக கடை கட்டி ஏலம் விடப்பட்டு புதிய வரிவிதிப்பு எண்ணில் செயல்பட்டு வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 39,388/- |
| 10 | 8 | கவுண்டம்ப ாளையம் பிரிவு அலுவலக ம் | 1 | 820604 | 2017-2018 - 11 2019-2020 - 7 | 2017-2018 முதல் 2019-2020 வரை செலுத்த வேண்டிய நிலுவைத்தொகையாக ரூ.1,79,613 கணினியில் உள்ளது. இக்கட்டிடத்தில் மாநகராட்சி உதவி பொறியாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. எனவே இக்கடைக்கான வரிவிதிப்பு எண் மற்றும் நிலுவைத் தொகையினை நீக்கம் செய்யலாம். | 1,79,613/- |
| 11 | | | 4 | 1020600 | 2019-2020-10 - 2021-2022-3 | இக்கடை சம்பந்தப்பட்ட உரிமதாரரால் நிலுவையின்றி வாடகை தொகையை செலுத்தி மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.எனவே அதற்கு பின்னா் உயா்த்தப்பட்ட கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம். | 50,51,915/- |
| 12 | 10 | மேட்டுப்பா ளையம் ரோடு புதிய பேருந்து நிலைய கடைகள் | 5 | 1020605 | 2017-2018-6 - 2021-2022-3 | இக்கடை சம்பந்தப்பட்ட உரிமதாரரால் நிலுவையின்றி வாடகை தொகையை செலுத்தி மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.எனவே அதற்கு பின்னா் உயா்த்தப்பட்ட கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம். | 5,80,000/- |
| 13 | | | 6 | 1020606 | 2017-2018 -1- 2021-2022-3 | இக்கடை சம்பந்தப்பட்ட உரிமதாரரால் நிலுவையின்றி வாடகை தொகையை செலுத்தி மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.எனவே அதற்கு பின்னா் உயா்த்தப்பட்ட கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம். | 6,30,000/- |
| 14 | 24 | ஆரோக்கி யசாமி மேற்கு | 1 | 2420369 | 2016-2017 -6 - 2021-2022-3 | இக்கடை சம்பந்தப்பட்ட உரிமதாரரால் நிலுவையின்றி வாடகை தொகையை செலுத்தி மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.எனவே அதற்கு பின்னா் உயா்த்தப்பட்ட கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம். | 39,67,500/- |
| **தெற்கு மண்டலம்** | | | | | | | |
| 15 | 79 | சலிவன் வீதி | 3 | 7920135 | 2013-2014 to 2021-2022 | பூட்டி சீல்வைக்கப்பட்ட காலத்தில் உயா்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 3,20,952/- |
| 16 | | | 3A | 7920526 | 2018-2019 to 2021-2022 | பூட்டி சீல்வைக்கப்பட்ட காலத்தில் உயா்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 1,68,276/- |

| 1 | | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 17 | 79 | ஏ.ஏ.ஸகீம் ரோடு | 2 | 7920530 | 2015-2016 to 2021-2022 | மனுதாரர் கடை நடத்த இயலாமல் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 11,02,190/- |
| 18 | 97 | தக்காளி மார்க்கெட் | 18 | 97397027 | 2014-2015 (AUG) 2016-2017 (JUL) | பூட்டி சீல்வைக்கப்பட்ட காலத்தில் உயர்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரி விதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 96,576/- |
| 19 | | | 31 | 97397014 | 2012-2013 (MAY) 2016-2017 (JUL) | பூட்டி சீல்வைக்கப்பட்ட காலத்தில் உயர்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 91,594/- |
| 20 | | | 30 | 97397031 | 2012-2013 (APR) 2012-2013 (JUN) | ஏலம் கோரப்படாத காலத்தில் உயர்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 27,747/- |
| 21 | | | 34 | 97397034 | 2012-2013 (APR) 2012-2013 (JUN) | ஏலம் கோரப்படாத காலத்தில் உயர்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 27,747/- |
| 22 | | | 33 | 97397033 | 2012-2013 (APR) 2012-2013 (JUN) | ஏலம் கோரப்படாத காலத்தில் உயர்வு செய்யப்பட்ட கேட்பு ஆகும் .எனவே கேட்பு தொகை மற்றும் வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | 27,747/- |
| 23 | | | 32 & 33 | 97397035 | 2015-2016 (OCT) 2016-2017 (JUL) | நிலுவை தொகை ஏதும் இல்லை மறு ஏலம் நடத்தப்பட வேண்டும். எனவே வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யலாம் | - |

| மண்டலவாரியாக கேட்பு நீக்கம் சுருக்கம் | | |
|---|---|---|
| மண்டலம் | கேட்பு நீக்கம் செய்யப்பட வேண்டிய கடைகளின் எண்ணிக்கை | தொகை (ரூ) |
| மேற்கு | 14 | 1,20,33,518/- |
| தெற்கு | 9 | 18,62,829/- |
| மொத்தம் | 23 | 1,38,96,347/- |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு, வரியில்லா இனங்களில் மாநகராட்சி கடைகளுக்கான மாதாந்திர வாடகை கேட்பு தொகை ரூ. 1,38,96,347/- ஐ கேட்பு பதிவிலிருந்து நீக்கம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.2277 /2020/எம்.ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 471 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

| | |
|---|---|
| **பொருள் :** | கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 77, சொக்கம்புதூர் மாரியம்மன் கோவில் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக. |
| **பார்வை :** | **1.** உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்களது குறிப்பு நாள்: **04.08.2020.** |

*****************

பார்வையில் காணும் உதவி செயற்பொறியாளர் குறிப்பில் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 77, சொக்கம்புதூர் மாரியம்மன் கோவில் அருகில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.**122.80** இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக **3403.07** சதுர அடியில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.**5,160/–** வாடகையாக நிர்ணயம் செய்யலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள விபரப்படி சொக்கம்புதூர் மாரியம்மன் கோவில் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.**5,160/–** என்ற வாடகையினை நிர்ணயம் செய்ய மன்றப் பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **5136/2021/அ1(தெ)**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 472 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 36 - Govel Trust - Aravind Eye Hospital - சொத்துவரிவதிப்பு எண் 368004 மற்றும் அதன் கேட்புத் தொகை ரூ.2,79,17,385/-னை கணினி பதிவுகளில் நீக்கம் செய்தல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :
1. சொத்துவரிவிதிப்பு எண். 368004.
2. இந்திய உச்சநீதிமன்ற உத்தரவு SLP (Civil) No : 1157-1158/2016, SLP (Civil) CC .No: 3:22178 - 22179 /2013/ Dt: 13.01.2014.
3. இந்திய உச்சநீதி மன்ற வழக்கறிஞர் திரு. பி. பாலாஜி அவர்களது கருத்துரை நாள். 14.07.2016.
4. கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 65/ 31.08.2016.
5. ஆணையாளர் அவர்களது உத்திரவு நாள். 20.08.2018.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 36, அவினாசி சாலை , Govel Trust/ Aravind Eye Hospital - கட்டிடத்திற்கு முந்தைய காளப்பட்டி பேரூராட்சி நடைமுறைகளின் படி சொத்துவரி விதிக்கப்படாமல் இருந்து பின் தணிக்கை தடையின் காரணமாக கடந்த 1996-97 -ம் வருடம் காளப்பட்டி பேரூராட்சியினால் சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து மேற்படி Govel Trust, சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P. எண். 14416/99, 14415/99 ஆகியவற்றின்படி வழக்குகளைத் தொடர்ந்திருந்தினர்.

வழக்கு நிலுவையில் இருந்த போது 50% சொத்துவரி தொகையினை செலுத்த ஆணையிடப்பட்டிருந்தது. ஆனால் 23.01.2009 -ஆம் தேதியன்று வழங்கப்பட்ட இறுதி தீர்ப்பு மனுதாரர்களுக்கு சாதகமாக அமைந்து அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பில் " In the light of the petitioner trust having succeeded in these two Writ petitions's and as it has also been held that they are not liable to pay property tax , the third respondent Town Panchayat is directed to refund the amount's collected from the Petitioner" என பகரப்பட்டிருந்தது.

இதனை எதிர்த்து பேரூராட்சி நிர்வாகம் சார்பாக W.P. எண். 1475/10, 1476/10 - இன் படி மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் கடந்த டிசம்பர் 2011 - இல் மேற்படி பேரூராட்சி மாநகராட்சி நிர்வாகத்துடன் இணைந்தது.

இந்நிலையில் மேற்படி உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்குகளும் கடந்த 04.06.2013 அன்று மனுதாரர்களுக்கு சாதகமாகவே தள்ளுபடி செய்யப்பட்டது.

அதனை எதிர்த்து கோயம்புத்தூர் மாநகராட்சியால் இந்திய உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு அதுவும் பார்வை (2)- இல் கண்டுள்ளவாறு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

பார்வை (3)- இல் கண்டுள்ளவாறு அன்றைய தேதியில் தமிழக அரசு சார்பான (Advocate on Record) இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி. பாலாஜி அவர்களது கருத்துரையில் இந்திய உச்சநீதிமன்றம் வரையில் வழக்குகள் நடத்தப்பட்டு விட்டதால், மேலும் மேல்முறையீடுக்கான எந்த வழிவகையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை (4)- இல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி மனுதாரர் செலுத்திய பகுதி சொத்துவரி தொகையும் திரும்ப வழங்கப்பட்டு விட்டது

தொடா்ந்து வரிவதிப்பு எண் 368004 -னையும் அதன் கேட்பினையும் நீக்கம் செய்திட பாா்வை (5)- இல் கண்டுள்ளவாறு ஆணையாளா் அவா்களது உத்தரவு பெறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட விபரங்கள் மேலான தகவலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

1. வரிவிதிப்பு எண் 368004 (அரவிந்த் கண் மருத்துவமனை) கடந்த 2009 ம் ஆண்டே சென்னை உயா்நீதி மன்றத்தினால் இரத்து செய்யப்பட்டு விட்டது.

2. இதன் மீதான முந்தைய பேரூராட்சியின் / தற்போதைய மாநகராட்சியின் மேல்முறையீடுகளும் இந்திய உச்ச நீதிமன்றம் வரை தள்ளுபடி செய்யப்பட்டு , “ There is no possibility of any further appeals” என இந்திய உச்சநீதி மன்ற வழக்கறிஞா் கருத்துரையும் பெறப்பட்டுள்ளது.

3. மேற்படி சொத்துவரி வதிப்பிற்கு மனுதாரா்களால் காளப்பட்டி பேரூராட்சி காலத்தில் செலுத்தப்பட்ட சொத்துவரிகளும், மாமன்ற தீா்மான எண் 65/31.08.2016 - இன் படி மாநகராட்சியால் திரும்ப வழங்கப்பட்டு விட்டது.

4. மேற்படி வரிவிதிப்பு மற்றும் அதன் கேட்பினை இரத்து செய்யவும் கடந்த 20.08.2018- இல் ஆணையாளா் அவா்களது ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இருப்பினும் தணிக்கை தடை வருவதினை தவிா்க்கும் பொருட்டும் முந்தைய மாமன்ற தீா்மான எண் 65, நாள். 31.08.2016- இன் படி தொடா் நடவடிக்கையாகவும், சென்னை உயா்நீதி மன்றத்தினால் இரத்து செய்யப்பட்ட சொத்துவரி விதிப்பு எண். 368004 (அரவிந்த கண் மருத்துவமனை) மற்றும் அதன் தற்போதைய கேட்பு ரூ. 2,79,17,385/- (1996-97 II முதல் 2021-22 II) -னை நீக்கம் செய்திடவும் மாமன்றத்தின் ஒப்புதலை எதிா்நோக்கி மன்றப்பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 8805/2013/அ6(கி)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 473 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

**பொருள்:** கோயம்புத்தூா் மாநகராட்சி – நில உரிமை மாற்றம் – தமிழ்நாடு அரசு உயா் கல்வி துறைக்கு, கலை மற்றும் அறிவியல் கல்லூரி உபயோகத்திற்கு நில உரிமை மாற்றம் உத்தேசம் – புலியகுளம் மாநகராட்சி பெண்கள் உயா்நிலைப் பள்ளி – நகரளவை எண் **3742**, வாா்டு எண் **10**, பிளாக் எண்.**18** ல் **3.33** ஏக்கா் நிலம் பரப்பளவு – தொடா்பாக.

**பாா்வை:** **1.**கல்லூரிக் கல்வி இணை இயக்குநா், கோவை மண்டலம் அவா்களின் கடிதம் ந.க.எண்.**2626**/அ**4**/**2020**, நாள்.**14.09.2020**
**2.**மாமன்ற தீா்மானம் எண்.**549**, நாள்.**21.09.2020.**

*******

பாா்வை **1**ல் காண் கல்லூரிக் கல்வி இணை இயக்குநா், கோவை மண்டலம் அவா்களின் கடிதத்தில் கேட்டுக்கொண்டதை தொடா்ந்து, நகரளவை எண் **3742**, வாா்டு எண் **10**, பிளாக் எண்.**18** ல் மாநகராட்சி பயன்பாட்டிற்காக **0.30** ஏக்கா் பரப்பளவு கொண்ட அலுவலக பயன்பாட்டு கட்டிடங்கள் நீங்கலாக உள்ள **3.65** ஏக்கா் பரப்பளவு நிலத்தினை புதிய கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு மாவட்ட நிா்வாகம் நிா்ணயம் செய்யும் நிலமதிப்பின் அடிப்படையில் நிலத்தினை உயா்கல்வி துறைக்கு நிலமாற்றம் செய்ய உரிய ஆணை பிறப்பிக்க வேண்டி நகராட்சி நிா்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்பவும், மேலும், புதிதாக துவங்கப்பட உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரி இக்கல்வியாண்டிலேயே செயல்படுத்தும் பொருட்டு புலியகுளம் மாநகராட்சி பெண்கள் உயா்நிலைப் பள்ளி கட்டிடம் மற்றும் வளாகத்தினை கல்லூரி பயன்பாட்டிற்கான தற்காலிகமாக செயல்பட முன்நுழைவு அனுமதி வழங்க பாா்வை **2**ல் காண் மாமன்ற தீா்மானம் நிறைவேற்றப்பட்டு நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களுக்கு **22.09.2020**ல் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டும், நகராட்சி நிா்வாக ஆணையா் கேட்டுக்கொண்டுள்ள கூடுதல் விபரங்கள் **21.03.2021**ல் அனுப்பப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியால் தற்போது மாநகராட்சி பகுதிகளுக்கான 24 X 7 குடிநீர் திட்டத்திற்காக 27.5 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைப்பதற்காக மேற்கண்ட புலியகுளம் நகரளவை எண் 3742, வார்டு எண் 10, பிளாக் எண்.18 ல் 0.30 ஏக்கர் பரப்பளவு கொண்ட அலுவலக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு அருகில் 32 சென்ட் (1295.04 ச.மீ) பரப்பளவிலான காலியிடம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, உயர் கல்வித் துறைக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்ட நகரளவை எண் 3742, வார்டு எண் 10, பிளாக் எண்.18 ல் மாநகராட்சி பயன்பாட்டிற்காக 0.30 ஏக்கர் பரப்பளவு கொண்ட அலுவலக பயன்பாட்டு கட்டிடங்கள் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 32 சென்ட் (1295.04 ச.மீ) பரப்பளவிலான இடங்கள் நீங்கலாக மீதம் உள்ள 3.33 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை புதிய கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகம் நிர்ணயம் செய்யும் நிலமதிப்பின் அடிப்படையில் நிலத்தினை உயர்கல்வி துறைக்கு நிலமாற்றம் செய்ய உரிய ஆணை பிறப்பிக்க வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 7871/2020/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 474 நாள் 26.10.2021**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி பொறியியல் பிரிவில் கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு விலை விபர அட்டவணை தயாரிக்க தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண். HDO(A)/00926/2021-1 நாள்.13/09/2021–ல் அனுமதி வழங்கப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. 2021–22 ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை 13/09/2021 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின் மூலம் சாலைப் பணிகளுக்கும் 2021–2022 ம் ஆண்டுகளுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை நெடுஞ்சாலை துறை உத்திரவு எண். **2744/TCI/DG/2021** நாள். 13/09/2021 ன்படி அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. இவ்விலை விபர அட்டவணை 13/09/2021 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட 2021–22–ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தவும் மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அனுமதிக்கலாம், ந.க.எண். 7959 / 2021 / TA

**மாநகர மன்ற தீர்மானம் எண் 475 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொறியற்பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண்.42க்கு உட்பட்ட - உடையாம்பாளையம் கே.கே.நகரில் உள்ள மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை :- 1) 2021 -22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கை அறிவிப்பு.
2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14006/2021/தி2 - நாள்.08.09.2021

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.42க்கு உட்பட்ட உடையாம்பாளையம் கே.கே.நகர் அருகில் உள்ள க.ச.எண்.287 சின்னவேடம்பட்டி கிராமத்திற்கு உட்பட்ட 4700.00 ச.மீ (116.00 செண்ட்) நிலப்பரப்பில் பார்வை(1)ல் கண்டவாறு 2021-22ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பின் அடிப்படையில் பார்வை(2)ல் கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டவாறு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதியில் எரிவாயு தகனமேடை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சம் |
|---|---|---|
| 1. | வடக்கு மண்டலம், வார்டு எண். 42க்குட்பட்ட உடையாம்பாளையம் கே.கே.நகர் மயானத்தில் எரிவாயு தகன மேடை (Gasifire Crematorium) அமைத்தல் | ரூ.150.00 |

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைக்க அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், நிர்வாக அனுமதி வேண்டி இப்பணியின் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்ப அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**7960/2021/எம்.டி.2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 476 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண். 2, 4 க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளுக்கு ஒரு வருட பராமரித்தல் பணி மற்றும் வார்டு எண். 2, 3, 4, 26 க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வினியோக குழாய்களில் ஏற்படும் கசிவுகள் சரி செய்தல் பணிகளுக்கு திரு.A.C.நாகராஜ்., மாநகராட்சி ஒப்பந்ததாரர் அவர்கள் 16.02.2021 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் எடுத்துள்ளார், மேற்கண்ட பணிகளுக்கு இதுநாள் வரை ஒப்பந்த பத்திரம் (Agreement) சமர்ப்பிக்கவில்லை. மேற்கண்ட திரு.A.C.நாகராஜ்., மாநகராட்சி ஒப்பந்ததாரர் அவர்கள் 10.07.2021 தேதியன்று அகால மரணமடைந்து விட்டார். எனவே பொதுமக்களுக்கு அத்தியவாசியமான குடிநீர் கசிவு சரி செய்தல், ஆழ்குழாய் கிணற்றுநீர் வினியோகம் செய்தல் போன்ற மேற்கண்ட பணிகள் பாதிப்படைந்துள்ளது.

| வ. எண் | வார்டு எண். | கோப்பு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்த புள்ளி தேதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 1418/2021/ எம்டி2 | வார்டு எண். 2-ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு | 6.30 | 16.02.2021 | |
| 2 | 4 | 1420/ 2021/ எம்டி2 | வார்டு எண். 4-ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு | 8.60 | 16.02.2021 | |
| 3 | 2 | 1449/ 2021/ எம்டி2 | வார்டு எண்.2-ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணிக்கு | 7.00 | 16.02.2021 | |
| 4 | 3 | 1450/ 2021/ எம்டி2 | வார்டு எண்.3-ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணிக்கு | 8.60 | 16.02.2021 | |
| 5 | 4 | 1451/ 2021/ எம்டி2 | வார்டு எண்.4-ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணிக்கு | 7.00 | 16.02.2021 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 26 | 1452/ 2021/ எம்டி2 | வார்டு எண்.26-ல் உள்ள பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் பணிக்கு | 7.00 | 16.02.2021 | |

ஒப்பந்ததாரர் அகால மரணமடைந்துவிட்டதால் மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளை செய்ய ஒப்பந்ததாரர் தரப்பிலிருந்து யாரும் முன் வராத காரணத்தினாலும், பொது மக்களுக்கு சீரான இடைவெளியில் சீரான குடிநீர் வினியோகம் வழங்க வேண்டியதின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், தொடர்ந்து வரும் புகார்களை சரி செய்யும் பொருட்டும், மேற்கண்ட பணிகளுக்கான ஓப்பந்தபுள்ளியினை ரத்து செய்யுமாறும், மேற்கண்ட பணிகளை அவசர மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதியும் உத்தரவும் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 1418/2021/எம் டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 477 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

பொருள்– கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் – வார்டு எண்.72–க்கு உட்பட்ட அனுப்பர்பாளையம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பயன்படுத்தப்படாத நிலையில் பழுதடைந்து இருக்கும் கட்டிடம் முன்பு தமிழ்நாடு மின்சாரவாரிய பயன்பாட்டில் இருந்தது – 40 ஆண்டுகள் பழமையான கட்டிடம் இடித்து அப்புறப்படுத்துவது – தொடர்பாக.

****

ஆணையர் அவர்களின் 21.10.21–ன் நேரடி களஆய்வின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண் 72–ல் உள்ள அனுப்பர்பாளையம் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள கட்டிடம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு மின்சாரவாரியத்தால் பயன்படுத்தப்பட்டு வந்த 54 ‘x22 ’ 0” அளவுள்ள தரைத்தளம் மற்றும் 36 ‘x22” அளவுள்ள முதல்தளம் ஆக இரண்டும் சேர்ந்து 1980 சதுரடி அளவுள்ள கட்டிடம் முற்றிலுமாக பழுதடைந்த நிலையிலும், பராமரித்து பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாலும் கட்டிடத்தை உடனடியாக இடித்து அப்புறபடுத்தவும், தற்சமயம் பாதுகாப்பு அரணாக விளங்கும் முன்புற சுவரில் நல்ல நிலையில் உள்ள மதிற்சுவர் உயரம் வரை விட்டுவிட்டு மீதமுள்ள பழுதான மற்ற அனைத்து சுவர்கள் மற்றும் கூரைகளையும் இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–அனுமதிக்கலாம். ந.க.எண்.7957/2021/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 478 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் – வார்டு எண்.83க்குட்பட்ட கருப்பகவுண்டர் வீதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியின் வடகிழபுறம் மற்றும் வட மேற்புறம் உள்ள சிதலமடைந்த உபயோகமற்ற தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவது – தொடர்பாக.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண்.83க்குட்பட்ட கருப்பகவுண்டர் வீதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியின் பள்ளியின் வடகிழபுறம் மற்றும் வட மேற்புறம் உள்ள சிதலமடைந்த உபயோகமற்ற கட்டிடத்தின் பரப்பளவு பின்வருமாறு:

1. பள்ளியின் வடகிழபுறம் உள்ள கட்டிடத்தின் பரப்பளவு
   i). தரை தளம் – 18.6m x 8.60m x 9.00m
   ii).முதல் தளம் – 18.6m x 8.6m x 9.00m
2. பள்ளியின் வடமேற்புறம் உள்ள கட்டிடத்தின் பரப்பளவு
   i). தரை தளம் – 18.00m x 10.20m x 10.00m
   ii).முதல் தளம் – 18.00m x 10.20m x 10.00m
   iii).படி கட்டு – 7.60m x 1.20m x 10.00m

எனவே மேற்காணும் அளவுள்ள மிகவும் பழுதடைந்துள்ள வடகிழபுறம் மற்றும் வட மேற்புறம் உள்ள சிதலமடைந்த உபயோகமற்ற தரைதளம், முதல் தளம் மற்றும் படி கட்டு கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **7958/2021**/எம்டி**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 479 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவு மூலம் மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் அபிவிருத்தி பணிகள், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், பூங்கா பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்கனவே பொதுநிதியில் முடிக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.**120.00** கோடிக்கு பட்டியல் தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மாநகராட்சியின் தற்போதைய நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய பணிகள், ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்ட நிலையில் பணிகள் ஏதும் துவங்கப்படாமலும், பிப்ரவரி மாதம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தேர்தல் அறிவிப்பு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மாமன்ற தீர்மானத்திற்கு கோப்புகள் சமர்ப்பிக்கப்படாமலும் உள்ளது.

எனவே, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய பணிகள், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட பணிகள் மற்றும் ஏற்கனவே துவங்கப்படாத பணிகளுக்கு மாநகராட்சியின் தற்போதைய நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு, ரத்து செய்ய வேண்டிய பணிகளின் விவரம் பின்வருமாறு,

| மத்திய மண்டலம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | வார்டு எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் |
| வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்படாத பணிகள் | | | | | |
| 1 | 80 | **1523/2020**/எம்.டி**5** | மத்திய மண்டலம் வார்டு எண். **80**க்குட்பட்ட பகுதிகளில் கிணற்று நீர் பகிர்மான குழாய் பதித்தல். | **5.25** | திரு. ஜி.அசோசியேட்ஸ் |
| 2 | 48 | **8424/2015**/எம்.டி**5** | மத்திய மண்டலம் வார்டு எண். **48**க்குட்பட்ட காந்திபுரம் 7வது வீதியில் கிழபுறம் இரயில்வே பாலம் முதல் தெற்காக உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் திரும்ப கட்டி மூடுபலகை அமைத்தல். | **49.50** | திரு.என்.பி.கே அசோசியேட்ஸ் |
| 3 | 48,51 | **3495/2016**/எம்.டி**5** | மத்திய மண்டலம் வார்டு எண். **48** மற்றும் **51** க்குட்பட்ட 7வது வீதி தொடர்ச்சியிலுள்ள சங்கனூர் பள்ளத்தின் குறுக்காக உள்ள பாலத்தினை மராமத்து செய்தல். | **4.55** | திரு.துரை கன்ஸ்ட்ரக்சன்ஸ் |
| 4 | 52 | **138/2021**/எம்.டி**5** | மத்திய மண்டலம் வார்டு எண். **52** மற்றும் **51** க்குட்பட்ட காந்திபுரம் **1**வது **2**வது விரிவாக்கம் மற்றும் ராதாகிருஷ்ணன் சாலை பகுதியிலுள்ள மழைநீர் வடிகால் தூர் வாருதல் மற்றும் மராமத்து பணிகள் செய்தல். | **9.97** | திரு.ஸ்ரீ வர்சன் பில்டர்ஸ் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 45 | 5359/2015/எம்.டி5 | மத்திய மண்டலம் வார்டு எண். 45க்குட்பட்ட சங்கம் நகர் பகுதியில் தடுப்புடன் கூடிய சிறுபாலம் திரும்பக் கட்டுதல். | 4.00 | திரு. எஸ்.விஜயகுமார் டேவிட்சன் |
| 6 | 81 | 1494/2021/எம்.டி5 | மத்திய மண்டலம் வார்டு எண்.81க்குட்பட்ட வெறைட்டி ஹால் சாலையிலுள்ள மாநகராட்சி அலுவலர் குடியிருப்புகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல். (2 எண்ணிக்கை) | 12.00 | தி/ள்.ஓம் சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் |
| 7 | 81 | 1495/2021/எம்.டி5 | மத்திய மண்டலம் வார்டு எண்.81க்குட்பட்ட மணிமேகலை வீதியிலுள்ள அலுவலர் குடியிருப்புகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல். (3 எண்ணிக்கை) | 16.80 | தி/ள்.ஓம் சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் |
| 8 | 81,82, 84 | 716/2018/எம்.டி5 | மத்திய மண்டலம் வார்டு எண்.81க்குட்பட்ட எஸ்.பி.என்.லே அவுட் மற்றும் சி.எம்.சி காலனி, மணிமேகலை வீதி, சவுடம்மன் கோவில் வீதி, ஜமேதார் வீதி மற்றும் திருமால் வீதி வார்டு எண்.82க்குட்பட்ட எஸ்.எஸ் கோவில் வீதி, சாமராவ் வீதி, என்.எச் சாலை, வின்செண்ட் சாலை, பழைய புத்தகக்கடை சாலை மற்றும் வார்டு எண்.84க்குட்பட்ட தர்மராஜா கோவில் வீதி மற்றும் அங்காளம்மன் கோவில் வீதி ஆகிய பகுதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல். | 98.80 | தி/ள். ஜெ.ராபார்ட் ராஜா |
| 9 | 80,84 | 715/2019/எம்.டி5 | மத்திய மண்டலம் வார்டு எண்.80க்குட்பட்ட இடையர் வீதி, வாணியர் வீதி மற்றும் வார்டு எண்.84க்குட்பட்ட நாடார் வீதி ஆகிய பகுதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல். | 69.50 | தி/ள். ஜெ.ராபார்ட் ராஜா |
| 10 | 25,84 | 718/2019/எம்.டி5 | மத்திய மண்டலம் வார்டு எண்.25க்குட்பட்ட தியாகி குமரன் வீதி மற்றும் கிருஷ்ணசாமி வீதி மற்றும் வார்டு எண்.84க்குட்பட்ட ஆர்.ஜி.வீதி, கனி ராவுத்தர், ராமர் கோவில் வீதி, பட்டுகார அய்யாசாமி வீதி, அய்யாசாமி வீதி, ராஜீ வீதிகளில் உள்ள சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல். | 89.20 | தி/ள். ஜெ.ராபார்ட் ராஜா |
| மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டிய பணிகள் | | | | | |
| 11 | 52 | 12496/2020/எம்.டி.5 | மத்திய மண்டலம் வார்டு எண்.52–க்குட்பட்ட காந்திபுரம் 3ஆம் வீதி விரிவாக்க பகுதியில் உள்ள சமுதாய கூடத்திற்கு பொது மக்களின் பயன்பாட்டிற்காக அபிவிருத்தி செய்தல். | 14.50 | தி/ள்.ஓம் சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் |
| 12 | 52 | 1026/2021/எம்.டி.5 | மத்திய மண்டலம் வார்டு எண்.52–க்குட்பட்ட டாக்டர்.இராதாகிருஷ்ணன் சாலையில் மழைநீர் வடிகால் திரும்பக் கட்டுதல் மற்றும் மூடுபலகை அமைத்தல். | 32.00 | திரு. ஆர்.செல்வராஜ் (தில்லை நகர்) |
| | | | மொத்தம் | 406.07 | |

எனவே, மத்திய மண்டல வார்டு பகுதிகளில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்க இயலாமல் நிலுவையில் உள்ளதால், மேற்கண்டுள்ள பணிகளை ரத்து செய்யலாம். மாநகராட்சியில் நிதிநிலை பற்றாக்குறை உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் அத்தியவாசிய பணிகளை கருத்தில் கொண்டும் நிதிநிலையை பொருத்தும், பணிகளை கள ஆய்வு செய்து உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர பணிகள் ஏதேனும் இருப்பின் மாநகராட்சி நிதி ஆதாரம் சீரானவுடன் முன்னுரிமையின் அடிப்படையில் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பொருளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்.1523/2020/எம்.டி5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 480 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கோயமுத்துார் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண்: 86-வது வார்டுக்குட்பட்ட புல்லுக்காடு ஹவுசிங் யூனிட் ஆடு அறுவைமையம் பின்புறம் உள்ள டோபிகானா திட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பெற்று விரைவில் பயனாளிகள் பயன்பாட்டிற்கு வர உள்ளனர். மேலும் மேற்படி இடத்தில் உள்ள மாநகராட்சி தார் சாலைகளில் பொது மக்களின் பாதுகாப்பு கருதி தெருவிளக்குகளுடன் கூடிய மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கட்டணத்தொகையான ரூ.22.50 இலட்சத்தை (1045(1) - ரசீது எண்: 202102042693) 04.02.2021-அன்று மாநகராட்சிக்கு செலுத்தியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி ஒப்புதல் பெறும் நேரத்தில் ஒப்பந்ததாரர் காலமாகிவிட்டபடியால் பணியானது பொருள் எண் 8: மன்ற தீர்மானம் நாள் 31.08.2021 அன்று ரத்து செய்யப்பட்டது. தற்பொழுது உக்கடம் மேம்பால பணிகளின் காரணமாக பணியின் அவசர அவசியம் கருதி பயனாளிகளை புல்லுக்காடு ஹவுசிங் யூனிட் ஆடு அறுவைமையம் பின்புறம் உள்ள டோபிகானா திட்ட பகுதிகளில் மாற்ற வேண்டி உள்ளதால் கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 86 | வார்டு எண்:86-க்குட்பட்ட புல்லுக்காடு ஹவுசிங் யூனிட் ஆடு அறுவைமையம் பின்புறம் உள்ள டோபிகானா திட்ட பகுதிகளில் LED தெருவிளக்குகளுடன் கூடிய மின்கம்பம் அமைத்தல் பணி.<br><br>ந.க.எண்:7970/2021/ எம்.டி4 | 22.50 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**7970/2021/**எம்.டி4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 481 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

கோயமுத்துார் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 86-வது வார்டுக்குட்பட்ட புல்லுக்காடு ஹவுசிங் யூனிட் உக்கடம் திட்டம்-4 மற்றும் பிள்ளையார்புரம் திட்டம் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பெற்று விரைவில் பயனாளிகள் பயன்பாட்டிற்கு வர உள்ளனர். மேலும் மேற்படி மாநகராட்சி தார் சாலைகளில் பொது மக்களின் பாதுகாப்பு கருதி தெருவிளக்குகளுடன் கூடிய மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கட்டணத்தொகையான ரூ.38.50 இலட்சத்தை (1045(1) - ரசீது எண் 202102042717 04.02.2021-அன்று மாநகராட்சிக்கு செலுத்தியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணி ஒப்புதல் பெறும் நேரத்தில் ஒப்பந்ததாரர் காலமாகிவிட்டபடியால் பணியானது பொருள் எண் 8 மன்ற தீர்மானம் நாள் 31.08.2021-ன் படி ரத்து செய்யப்பட்டது. தற்போழுது உக்கடம் மேம்பால பணிகளின் காரணமாக பணியின் அவசர அவசியம் கருதி பயனாளிகளை புல்லுக்காடு ஹவுசிங் யூனிட் உக்கடம் திட்டம்-4 மற்றும் பிள்ளையார்புரம் திட்டம் பகுதிகளில் மாற்ற வேண்டி உள்ளதால் கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பேயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 86 | வார்டு எண்:86-க்குட்பட்ட புல்லுக்காடு ஹவுசிங் யூனிட் உக்கடம் திட்டம்-4 மற்றும் பிள்ளையார்புரம் திட்டம் ஆகிய பகுதிகளில் LED தெருவிளக்குகளுடன் கூடிய மின்கம்பம் அமைத்தல் பணி.<br><br>ந.க.எண்7969/2021/எம்.டி 4 | 38.50 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**7969/2021/**எம்.டி4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 482 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2021 முதல் 31.10.2021 முடிய ஏழு மாத காலத்திற்கு மட்டும் டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும் மற்றும் 01.11.2021 முதல் ஒப்பந்தத்தை ரத்து செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.629, நாள்.26.11.2020.
2. மெசர்ஸ் தமிழ்நாடு எக்ஸ் சர்வீஸ் மென்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் (டெக்ஸ்கோ) சென்னை அவர்களின் கடிதம் 21.04.2021.
3. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.22.10.2021

--------

பார்வை 1ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.629ன்படி மெசர்ஸ் தமிழ்நாடு எக்ஸ் சர்வீஸ்மென்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தினருக்கு 01.04.2020 முதல் 31.03.2021 முடிய ஓராண்டு காலத்திற்கு 5 ஓட்டுநர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு மாத ஊதியம் ரூ.29,079/– (சேவைக் கட்டணம் 12ரூ மற்றும் அதற்குரிய சேவை வரிக் கட்டணம் 15ரூ உட்பட) வழங்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் 31.03.2021 உடன் முடிவடைகிறது.

பார்வை 2ல் காணும் டெக்ஸ்கோ நிறுவனத்தின் கடிதத்தில், டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு ஆன ஒப்பந்த காலம் 31.03.2021–ல் முடிவடைவதால், ஒப்பந்தத்தை 01.04.2021 முதல் 31.03.2022 வரை நீட்டிப்பு செய்து, அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.29079/– (சேவைக்கட்டணம் 12ரூ மற்றும் அதற்குரிய சேவைவரி 18ரூ உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கும்படி கோரியுள்ளனர்.

டெக்ஸ்கோ நிறுவன ஓட்டுநர்களுக்கு மாத ஊதியமாக ஒரு நபருக்கு ரூ.29,079/– (சேவைக்கட்டணம் 12ரூ மற்றும் அதற்குரிய சேவைவரி 18ரூ உட்பட) ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சி வாகனங்களை இயக்கி வரும் டெக்ஸ்கோ நிறுவனம் அல்லாத மற்ற ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு மாத ஊதியமாக ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.19,536/–(வரிகள் உட்பட) வழங்கப்பட்டு வருகிறது.

மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட டெக்ஸ்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஊதியம் அதிகமானதாகும். எனவே, மாநகராட்சி நிதிநிலைமையை கருத்தில் கொண்டும், அரசுக்கு நிதி சுமை குறைக்கும் நடவடிக்கையில், டெக்ஸ்கோ நிறுவன ஓட்டுநர்களுக்கு ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த 5 டெக்ஸ்கோ ஓட்டுநர்களில் திரு.ளு.ஏ.செல்லத்துறை அவர்கள் கடந்த 7.9.2020 அன்று காலமாகிவிட்டதால், மீதமுள்ள 4 டெக்ஸ்கோ ஓட்டுநர்களுக்கு மட்டும் அவர்கள் பணிபுரிந்த 01.04.2021 முதல் 31.10.2021 முடிய உள்ள ஏழு மாத காலத்திற்கு மட்டும் ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து அதற்கான செலவினம் ரூ.8,14,212/–க்கு ஒப்புதல் வேண்டியும், மேலும் 1.11.2021 முதல் டெக்ஸ்கோ நிறுவனத்திற்கான ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.4828/2020/எம்.சி.7)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 483 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களை பராமரிக்கும் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் வரை. ஏற்கனவே, பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர்கள் மூலம் பணி மேற்கொள்வது தொடர்பாக கிழக்கு மண்டலம் பொது கழிப்பிடம் பணிகளுக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்த நிலையில் 2021-22-ம் ஆண்டுக்கு புதிதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 26.02.2021-ம் தேதியில் கோரப்பட்ட தருவாயில் சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகளின் காரணமாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்பு நிறுத்திவைக்கப்பட்டது. தற்போது, பொதுமக்கள் நலன் கருதி தினமும் உபயோகபடுத்தி வரும் பொது கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பராமரிக்கும் பணிக்கு அதே ஒப்பந்ததாரர்களை கொண்டு அதே விலைப்பட்டியல் அடிப்படையில் அடுத்த ஒப்பந்தப்புள்ளிகோரும் வரை கோப்புகள் முடிவடைந்த நாள் முதல், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி புதிதாக ஒப்பந்ததாரரை தேர்வு செய்தும் வேலை உத்திரவு வழங்கும் வரை இப்பணியை மேற்கொள்ள ஏற்படும் செலவு தொகையை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**பொது கழிப்பிடம் பராமரிப்பு பணிகளின் விபரம்**

| வ. எண் | வார்டு எண் | கோப்பு எண் | வேலையின் பெயர் | மதிப்பட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | தற்போதைய ஒப்பந்தம் முடிவு பெறும் நாள் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 33 & 34 | 4422/2020/ எம்.டி.3 | வார்டு எண் 33 மற்றும் 34-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **22.00** | 31.07.2021 | M/s ஆதவ் பில்டர்ஸ் |
| 2 | 56 & 57 | 4424/2020/ எம்.டி.3 | வார்டு எண் 56 மற்றும் 57-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை (9 எண்ணிக்கை) வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **11.10** | 26.07.2021 | M/s ஆதவ் பில்டர்ஸ் |
| 3 | 58 & 59 | 4425/2020/ எம்.டி.3 | வார்டு எண் 58 மற்றும் 59-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை (7 எண்ணிக்கை) வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **9.20** | 30.03.2021 | M/s சசி அசோசியேட்ஸ் |
| 4 | 60 & 61 | 4426/2020/ எம்.டி.3 | வார்டு எண் 60 மற்றும் 61-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை (11 எண்ணிக்கை) வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **13.00** | 04.04.2021 | A.ராதாகிருஷ்ணன் |
| 5 | 63 & 64 | 4427/2020/ எம்.டி.3 | வார்டு எண் 63 மற்றும் 64-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை (17 எண்ணிக்கை) வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **19.20** | 04.04.2021 | M/s கார்தீப் இன்ஜினியரிங் |
| 6 | 65 & 66 | 4428/2020/ எம்.டி.3 | வார்டு எண் 65 மற்றும் 66-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை (10 எண்ணிக்கை) வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **11.80** | 26.07.2021 | M/s ஆதவ் பில்டர்ஸ் |
| 7 | 67,69 & 75 | 4429/2020/ எம்.டி.3 | வார்டு எண் 67,69 மற்றும் 75-க்குட்பட்ட பொது கழிப்பிடங்களை (9 எண்ணிக்கை) வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் | **12.00** | 04.04.2021 | M/s PAT எண்டர்பிரைசஸ் |

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண். **4422 /2020/எம்.டி.3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 484 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள் : பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - புதிய வீடு வாங்க முன்பணம் மாநகராட்சி கட்டிட முன் நிதியிலிருந்து அனுமதிக்க - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை :
1. திருமதி ஆர்.சத்யா, தேர்ச்சி திறனற்ற பணியாளர் அவர்களின் விண்ணப்ப நாள். 23 -08-2021.
2. அரசாணை எண். 1853, வீட்டு வசதி, நாள்.07-12-1987 மற்றும் தொடர்புடைய அரசாணைகள்.
3. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் உத்தரிரவு நாள். 24.10.2021

பார்வை 1-ல் காணும் விண்ணப்பத்தில் திருமதி ஆர்.சத்யா, தேர்ச்சி திறனற்ற பணியாளர் அவர்கள் "தான் கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 21-08-2013 அன்று பணியில் சேர்ந்து தற்போது 8 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும். கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.33- கச.எண் 1046/1B ஸ்ரீகிருஷ்ணா நகர் கோயம்புத்தூர்-641048 என்ற முகவரியில் அமைந்துள்ள முகவரியில் புதிய வீடு வாங்க முன்பணம் அனுமதிக்க கோரியுள்ளார்.

தற்போது நடப்பில் உள்ள அரசாணைகளின் படி வீடு கட்டு முன்பண விண்ணப்பம் சமர்ப்பிக்க 4ஆண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும். மனுதாரர் 8 ஆண்டுகள் பணி முடித்துள்ளார்.

மேலும் மனுதாரர் மீது 8(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் இல்லை.

எனவே மேற்படியார் புதிய வீடு வாங்க வீடு கட்டு முன்பணம் பெற கீழ்க்கண்டவாறு விதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

1. வீடு கட்டும் முன்பணம் பெற குறைந்த பட்சம் 4 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். மனுதாரர் 8 ஆண்டுகளாக மாநகராட்சியில் பணியாற்றி வருகிறார்.
2. எஞ்சிய பணிக்காலம் 5 ஆண்டுகள் இருக்க வேண்டும். மனுதாரருக்கு இன்னும் 27 ஆண்டுகள் பணிக்காலம் உள்ளது.
3. மனுதாரர் மீது 8(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் இல்லை.
4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
5. மேற்படி இடத்தில் கட்டிடம் கட்டி கொள்ள மாநகராட்சி வசம் பெறப்பட்ட கட்டிட அனுமதி நகல் மற்றும் வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
6. கட்டுமானத்திற்காக மதிப்பீட்டு பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர் சான்றுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
7. மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் பத்திர எண். 4189/2020, 3344/2008-ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.
8. விதிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு 6மாத கால அவகாசத்தினை கடக்காத வில்லங்க சான்று நகல் இணைக்கப்பட்டுள்ளது.
9. மாநகராட்சி வழக்கறிஞரின் கருத்துரு பெறப்பட்டுள்ளது

<u>தகுதியான முன்பணம்.</u>

தற்போது நடைமுறையில் உள்ள அரசாணை எண்.24/02.02.2021 Housing & Urban Development ன்படி தகுதியான அதிகபட்ச வீடு கட்டும் முன்பணம் ரூ.40,00,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தகுதியான முன்பணம் = (Pay + DA) x 90 மாதங்கள்
= +.23,800+4,046=27,846/-
= +.27,846x90 = 25,06,140/-

நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச பணிக்காலம் 20 வருடங்கள் ஆகும். மனுதாரருக்கு எஞ்சியுள்ள பணிக்காலம் 27 வருடங்கள் ஆகும்.

<u>முன்பணம் விடுவித்தல்</u>

கட்டிய வீட்டினை கிராயம் பெறுவதால் ஒரே தவணையாக முன்பணம் அனுமதிக்க வழி வகை உள்ளது.

சொத்தினை அடமானம் செய்துவர விண்ணப்பத்துடன் படிவம் 5-ல் மனுதாரர் ஏற்கனவே வழங்கியுள்ள உறுதிமொழியின் அடிப்படையில் புதிய வீடு வாங்க 100% முன்பண தொகையும், ஒரே தவணையாக விடுவிக்க வழிவகை உள்ளது.

வட்டி விகிதம்

தற்போதைய விதிமுறைகளின்படி கீழ்க்கண்டவாறு வட்டி தொகை நிர்ணயிக்கலாம். (அரசாணை எண். 24/02.02.2021 நிதி) G.O.MS NO. 98, நாள். 26.02.2021- Finance (Loans and Advances cell) Department

| தொகை | வட்டி சதவீதம் |
|---|---|
| 0 முதல் ரூ.50000 வரை | 4.50% |
| ரூ.50001 முதல் ரூ.1,50,000 வரை | 6.00% |
| ரூ.1,50,001 முதல் ரூ.5,00,000 வரை | 8.00% |
| ரூ.5,00,000 ற்கு மேல் | 9.00% |
| தவணை மீறிய தொகைக்கு அபராதம் | 2.50% |

பிடித்தம்

விதிமுறைகளின்படி அசல் தொகை 15 வருட சமதவணைகளாகவும் பிறகு வட்டி தொகை 60 மாத தவணைகளில் பிடித்தம் செய்ய வழிவகை உள்ளது. மனுதாரருக்கு போதுமான பணிக்காலம் உள்ளதால் அசல் தொகையினை 15 வருட சமதவணைகளாகவும் பின் வட்டி தொகையினை 60 மாத சமதவணைகளாகவும் பிடித்தம் செய்யவும், மற்றும் மேற்படி விதிமுறைகளின் படி இதர வீடு கட்டும் முன்பணம் நிபந்தனைகளுக்குட்பட்டு மனுதாரருக்கு புதிய வீடு வாங்க முன்பண தொகை ரூ.24,00,000 /-ம் ஒரே தவணையாக வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மேற்காணும் பொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.7026/2021/சி1 (கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 485 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண். 23 – டி பி ரோடு மாநகராட்சி வணிக வளாக கடை எண். 14 உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது – உரிமம் ரத்து செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை

1. திரு. பி. ரகுராம் என்பவரது விண்ணப்பம் நாள்.27.08.2021 மற்றும் 27.09.2021
2. காவல் உதவி ஆய்வாளர், பி2, ஆர்.எஸ் புரம் காவல் நிலையம் அவர்களின் கடிதம் நாள்.06.09.2021.
3. திரு. ஆர். ராஜ்குமார், த,பெ ஆறுமுகம் அவர்களின் கடிதம் நாள்.13.09.2021 மற்றும் 20.09.2021.
4. உதவி ஆணையாளர் (மேற்கு) அவர்களின் இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.14.09.2021 மற்றும் 17.09.2021.
5. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.26.09.2021.

----------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். **23** டி.பி. ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். **14** உரிமதாரர் திரு. ஆறுமுகம் என்பவர் பெயரில் உள்ளது. இக்கடைக்கு மாதாந்திர வாடகை ரூ.**9,942/–** ஆகும்.

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தில் திரு. பி. ரகுராம் என்பவர் Shree Aadithiyaa Cell Solutions கடந்த 2005 முதல் நடத்தி வருவதாகவும், உடல்நிலை காரணமாக எனது உறவினர் மேற்காண் கடையினை நடத்த முடியவில்லை எனவும், எனவே தனது பெயருக்கு கடை எண். 14-ஐ பெயர் மாற்றம் செய்து வழங்குமாறு கோரியுள்ளார்.

பார்வை 2ல் காணும் காவல் உதவி ஆய்வாளர் கடிதத்தில் மனுதாரர் திரு. முகமது இஸ்மாயில் என்பவர் ஆர்.எஸ்.புரம், டி.பி. ரோட்டில் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்திலுள்ள கடை எண். **14**ல் எதிர்மனுதாரர் ரகுராம் என்பவரை பணிக்கு அமர்த்தி இருந்ததாகவும், கடையிலுள்ள பொருட்களை எடுத்து சென்றுவிட்டதாகவும், ரகுராம் என்பவர் தான் அந்தக் கடையை அட்வான்ஸ் கொடுத்து வாடகைக்கு கடை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கிறார் எனவும், எனவே மேற்படி கடை எண். **14**ல் உரிமையாளர் குறித்த விபரம் **2014**ம் ஆண்டு முதல் தற்போது வரை வழங்குமாறு கோரியுள்ளார்.

பார்வை 1ல் காணும் கடிதத்தில் திரு. பி ரகுராம் என்பவர் Shree Aadithiyaa Cell Solutions என்ற பெரியல் மேற்படி கடை எண்.14ஐ 2014 முதல் நடத்தி வருவதாகவும், தற்போது தேவையில்லாத நபர்கள் இடையூறு ஏற்படுத்தவதாகவும் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

களவிசாரணை செய்யப்பட்டதில் கடை எண். 14 ஆனது திரு. ஆறுமுகம் பெயரில் உரிமம் உள்ளது. அவர் கடந்த 7.7.2009ல் காலமாகிவிட்டார். மேற்படி கடையினை முகமது இஸ்மாயில் என்பவர் உள்வாடகைக்கு எடுத்து நடத்தி வந்துள்ளார். அவரது கடையில் பணியில் இருந்து திரு. ரகுராம் என்பவர் திரு. முகமது இஸ்மாயில் என்பவரிடமிருந்து கடையினை உள்வாடகைக்கு எடுத்து நடத்தி வருவது தெரிய வருகிறது. இந்நிலையில் தற்போது டி.பி.ரோடு பிரதான சாலையானது திறன்மிகு நகரம் திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளதால் மூவரும் (திரு. ரகுராம், திரு. முகமது இஸ்மாயில் மற்றும் திரு. ராஜ்குமார்) உரிமை கோருகின்றனர். குத்தகை விதிகளுக்கு முரணாக உள்வாடகைக்கு விடப்பட்டு கடை நடத்தப்பட்டு வருவதால் மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மூலம் ஒப்படைப்பு செய்ய பார்வை 5ல் காணும் ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி கடையின் உரிமதாரர் ஆகஸ்ட் 2021 வரையிலான வாடகை தொகையை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். செப்டம்பர் 2021 மற்றும் அக்டோபர் 2021 ஆகிய இருமாதங்களுக்கான வாடகை தொகையினை வைப்புத்தொகையிலிருந்து சரிசெய்ய வேண்டும்.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 23 டி.பி. ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 14ன் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மூலம் ஒப்படைப்பு செய்யவும், உரிமதாரர் செலுத்தியுள்ள வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை ஆகியவற்றினை பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 5560/2021/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 486 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவு மூலம் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் அபிவிருத்தி பணிகள், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், பூங்கா பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்கனவே பொதுநிதியில் முடிக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.120.00 கோடிக்கு பட்டியல் தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மாநகராட்சியின் தற்போதைய நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்ட நிலையில் பணிகள் ஏதும் துவங்கப்படாமலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படாமலும் உள்ளது.

எனவே, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட பணிகள், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படாத பணிகள் மற்றும் ஏற்கனவே துவங்கப்படாத பணிகளுக்கு மாநகராட்சியின் தற்போதைய நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு, ரத்து செய்ய வேண்டிய பணிகளின் விவரம் பின்வருமாறு,

| கிழக்கு மண்டலம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **வார்டு எண்** | **ந.க.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** |
| **ஒப்பந்தம் பத்திரம் எழுத வேண்டிய பணிகள்** | | | | | |
| 1 | 59 | 12460/2020/எம்.டி.3 | வார்டு எண் 59–க்குட்பட்ட நேதாஜிபுரம் TNEB பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் தார் பேட்ச் அமைத்தல். | 9.80 | தி/ள்.கே.எஸ்.ஆர் அன் கோ |
| 2 | 59 | 12476/2020/எம்.டி.3 | வார்டு எண் 59–க்குட்பட்ட சுங்கம் கிரவுண்ட் முதல் சூர்யா நகர் இரயில்வேகேட் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் தார் பேட்ச் அமைத்தல். | 9.90 | தி/ள்.கே.எஸ்.ஆர் அன் கோ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்படாத பணிகள் | | | | | |
| 3 | 32 | 12586/2020/எம்.டி.3 | வார்டு எண் 32–க்குட்பட்ட அம்பேத்கர் நகர், விநாயகபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளிக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல். | 6.90 | தி/ள்.ஆதவ் பில்டர்ஸ் |
| | | | **மொத்தம்** | **26.60** | |

எனவே, கிழக்கு மண்டல வார்டு பகுதிகளில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்க இயலாமல் நிலுவையில் உள்ளதால், மேற்கண்டுள்ள பணிகளை ரத்து செய்யலாம். மாநகராட்சியில் நிதிநிலை பற்றாக்குறை உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் அத்தியவாசிய பணிகளை கருத்தில் கொண்டும் நிதிநிலையை பொருத்தும், பணிகளை கள ஆய்வு செய்து உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர பணிகள் ஏதேனும் இருப்பின் மாநகராட்சி நிதி ஆதாரம் சீரானவுடன் முன்னுரிமையின் அடிப்படையில் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பொருளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–அனுமதிக்கலாம் ந.க.எண்.12460/2020/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 487 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்55க்குட்பட்ட பாப்பநாயக்கன்பாளையம் பகுதியில் பாரதியார் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்திலுள்ள சத்துணவுக்கூட சிமெண்ட் சீட் கூரையுடைய பழைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து இருப்பதால் இக்கட்டிடத்தை அப்புறப்படுத்த ஆணையாளர் அவர்கள்ஆய்வு கூட்டத்தில் பள்ளிகளில் உள்ள பழுதடைந்த கட்டிடத்தை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த உத்திரவிட்டுள்ளதை தொடர்ந்து தலைமை ஆசிரியர் மூலம் பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையிலும் மேற்படி பழுதடைந்துள்ள சத்துணவுக்கூட சிமெண்ட் சீட் கட்டிடத்தை அப்புறப்படுத்தவும் மற்றும் கட்டிடத்தில் உள்ளே உள்ளமின் மோட்டார் இணைப்புகளை மாற்றி கட்டிடத்தின் வெளிப்புறம் வைக்கவும் மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை செய்யவும் பணிகள் முழுமையாக முடித்த பின்பு உத்தேச செலவுத்தொகை ரூபாய் 40,795.00க்கு ஒப்பந்ததாரருக்கு சில்லறை செலவினப் பட்டியல் வாயிலாக உதவி ஆணையாளர் வடக்கு மண்டலம் அவர்கள் மூலம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.008511/2021/ எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 488 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி- வடக்கு மண்டலம் - கோவை சங்கனூர் மெயின் ரோடு இராய்பபா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் இரண்டாம் தளத்தில் இயங்கிவரும் அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த - உரிம கட்டணம் உயர்வு செய்து உரிமம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக

**பார்வை** : அரசாணை நிலை எண் 92. நுகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 03.07.2007

**********

பார்வையில் காணும் அரசாணையில் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் உரிம கட்டணம் உயர்வு செய்ய வேண்டும் எனவும், ஒன்பது ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் உரிம கட்டணம் மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண் 47 மாநகராட்சிக்கு சொந்தமான சங்கனூர் மெயின் ரோடு இராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்திலல் இரண்டாம் தளத்தில் இயங்கிவரும் அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக்கட்டணம் ரூ.8965/- அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டு மேற்படி கடையின் உரிம காலம் 07.09.2016ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது.

மேற்படி சங்கனூர் மெயின் ரோடு இராயப்பா நகர் வாட்டர் டேங்க் கட்டிடத்தில் இரண்டாம் தளத்தில் இயங்கிவரும் அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு அலுவலகத்திற்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிம கட்டணம் உயர்வு செய்து உரிம நீட்டிப்பு செய்ய சம்மதம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளார்கள்.

**இராயப்பா நகர் வாட்டர் டேங்க் இரண்டாம் தளம் (வார்டு எண் 47)**

| வ. எண் | பெயர் | கட்டிடத்தின் பரப்பளவு | தற்போதைய உரிம கட்டணம் | 15 % உயர்வு செய்யப்பட வேண்டிய உரிம கட்டணம் | உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | காவல் ஆய்வாளர் வி.பி.சி.பி (அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு) | 882 | 8965 | 10310<br><br>11857 | 08.09.2016முதல் 06.09.2019 வரை<br><br>07.09.2019முதல் 06.09.2022 வரை |

எனவே அரசாணை நிலை எண் 92. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 03.07.2007ன்படி 08.09.2016 முதல் 06.09.2019 மற்றும் 07.09.2019 முதல் 06.09.2022 வரையிலான காலங்களுக்கு தற்போதைய உரிம கட்டணத்தில் 15 சதவீதம் உயர்வு செய்து உரிம நீட்டிப்பு செய்யவும் வித்தியாச தொகையினை வசூல் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2017/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 489 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு **2021–22** – மாநகராட்சியில் பழைய கழிப்பறைகள் புதுப்பிப்பது **–** விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் **–** தொடர்பாக.

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு **2021–22** ன் படி சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் புதுப்பித்தல் தொடர்பான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனை தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சியில் சமுதாய கழிப்பிடங்கள் புதுப்பித்தல் பணிக்கு ரூ.**21.37** இலட்சத்திற்கும், பொதுக்கழிப்பிடங்கள் புதுப்பித்தல் பணிக்கு ரூ.**28.00** இலட்சத்திற்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | சமுதாய கழிப்பிடங்கள் | மதிப்பீடுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **1** | மேற்கு மண்டலம் வார்டு எண் **10** க்குட்பட்ட சேர்மன் ராஜு நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | **4.00** |
| **2** | தெற்கு மண்டலம் வார்டு எண் **78** க்குட்பட்ட ஐருனுரு காலனியில் உள்ள பொது கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | **5.00** |
| **3** | கிழக்கு மண்டலம் வார்டு எண் **61** க்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | **4.00** |
| **4** | மத்திய மண்டலம் வார்டு எண் **50** க்குட்பட்ட அண்ணாநகர் சிவானந்த காலணி உள்ள சமுதாய கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | **4.37** |
| **5** | வடக்கு மண்டலம் வார்டு எண் **55** க்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | **4.00** |
| | மொத்தம் | **21.37** |

| வ. எண் | பொதுக்கழிப்பிடங்கள் | மதிப்பீடுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம் வார்டு எண் 40 க்குட்பட்ட ஸ்ரீவல்லி நகர் பகுதியில் பொது கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | 4.00 |
| 2 | மேற்கு மண்டலம் வார்டு எண் 14 க்குட்பட்ட கோவில் மேடு மற்றும் காந்தி நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | 6.00 |
| 3 | மேற்கு மண்டலம் வார்டு எண் 20 க்குட்பட்ட ராஜன் காலனி மற்றும் நேருஜி வீதியில் உள்ள பொது கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | 5.00 |
| 4 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75 க்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் பிரதான சாலையில் உள்ள சமுதாய கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | 5.00 |
| 5 | மத்திய மண்டலம் வார்டு எண் 50 க்குட்பட்ட மாஸ்தியம்மாள் லேஅவுட் சிவானந்த காலனியில் உள்ள பொது கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | 4.00 |
| 6 | மத்திய மண்டலம் வார்டு எண் 51 க்குட்பட்ட ஸ்ரீனிவாசபுரம் காலனியில் உள்ள பொது கழிப்பிடம் புதுப்பித்தல் பணி | 4.00 |
| | மொத்தம் | **28.00** |

மேற்கண்ட பகுதிகளில் சமுதாய கழிப்பிடங்கள் புதுப்பித்தல் பணிக்கு ரூ.21.37 இலட்சத்திற்கும், பொதுக்கழிப்பிடங்கள் புதுப்பித்தல் பணிக்கு ரூ.28.00 இலட்சத்திற்கும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு, ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:—அனுமதிக்கலாம் ந.க.எண். 8024/2021/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 490 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி —“Infrastructure and Amenities Fund“ திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் இணைப்பு சாலைகள் அமைக்க ரூ.144.80 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் — தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியில் “Infrastructure and Amenities Fund“ திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் இணைப்பு சாலைகள் அமைக்க ரூ.144.80 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருள் | மதிப்பீடுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 56—க்குட்பட்ட ஃபன்மால் சாலை, பிஎஸ்ஜி சாலை, பிபிஎஸ் காலனி விஸ்தரிப்பு சாலை, அண்ணாநகர் விஸ்தரிப்பு சாலை, வரதராஜா மில் பீளமேடு சாலை ஆகிய பகுதிகளில் விடுபட்ட இணைப்பு சாலை அமைத்தல். | 18.59 |
| 2 | வார்டு எண். 65 & 66 — க்குட்பட்ட புலியகுளம் பிரதான சாலை முதல் ராஜீவ்காந்தி நகர் சாலை ஆகிய பகுதிகளில் விடுபட்ட இணைப்பு சாலை அமைத்தல். | 45.62 |
| 3 | வார்டு எண்.15—க்குட்பட்ட ஐஸ்வர்யா நகர் முதல் மருதமலை பிரதான சாலை வரை விடுபட்ட இணைப்பு சாலை அமைத்தல். | 19.87 |
| 4 | வார்டு எண் 56—க்குட்பட்ட அவனாசி சாலை அண்ணாநகர் விஸ்தரிப்பு சாலை முதல் வரதராஜா மில் சாலை வரை உள்ள பகுதிகளில் விடுபட்ட இணைப்பு சாலை அமைத்தல். | 55.54 |
| 5 | வார்டு எண் 40—க்குட்பட்ட எஸ் என் ஆர் கல்லூரி சாலை, ஆவாரம்பாளையம் சாலை, நவஇந்தியா சாலை பகுதிகளில் விடுபட்ட இணைப்பு சாலை அமைத்தல். | 5.18 |
| | மொத்தம் | **144.80** |

மேற்கண்ட பகுதிகளில் “Infrastructure and Amenities Fund“ திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் இணைப்பு சாலைகள் அமைக்க ரூ.144.80 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு அரசு முதன்மை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அவர்களின் ஒப்புதல் வேண்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:—அனுமதிக்கலாம் ந.க.எண். 7971/2021/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 491 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் வார்டு எண்–81 க்குட்பட்ட அலுவலர் குடியிருப்புக்கு அபிவிருத்தி பணி மேற்கொள்ளுதல் பணிக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள்தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பிடு (ரூ) |
|---|---|---|---|
| 1 | 8026/2021/எம்.டி.5 | கோயம்புத்தூர் மாநகராட்சி–மத்திய மண்டலம் வார்டு எண்–81 க்குட்பட்ட மணிமேகலை வீதியிலுள்ள மாநகராட்சி குடியிருப்புக்கு அபிவிருத்தி பணி செய்தல் (3 குடியிருப்புகள்) | 19,80,000/– |
| 2 | 8027/2021/எம்.டி.5 | கோயம்புத்தூர் மாநகராட்சி–மத்திய மண்டலம் வார்டு எண்–81 க்குட்பட்ட வெரைட்டி ஹால் சாலையிலுள்ள மாநகராட்சி குடியிருப்புக்கு அபிவிருத்தி பணிசெய்தல் (2 குடியிருப்புகள்) | 12,00,000/– |

மேற்படி உள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :அனுமதிக்கலாம். ந.க.எண். 8026/2021 /எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 492 நாள் 26.10.2021**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவின் படி குளங்கள் மற்றும் குட்டைகளை தூர்வாருதல் மற்றும் புனரமைத்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள குளங்கள் மற்றும் குட்டைகளை தூர்வாருதல் மற்றும் புனரமைத்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிக்கு ரூ.401.00 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருள் | மதிப்பீடுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மேற்கு மண்டலம், வார்டு எண்19 –க்குட்பட்ட அஜ்ஜனூர் கீர்த்தி நகர் அருகில், க.ச.எண்.396, வீரகேரளம் கிராமத்தில் உள்ள குட்டையை புனரமைத்தல் . | 55.00 |
| 2 | மேற்கு மண்டலம், வார்டு எண்19 –க்குட்பட்ட மாநகராட்சி பள்ளி எதிரில், க.ச.எண்.391, வீரகேரளம் கிராமத்தில் உள்ள குட்டையை புனரமைத்தல் . | 130.00 |
| 3 | கிழக்கு மண்டலம், வார்டு எண்32 –க்குட்பட்ட க.ச.எண்.178/1A, விளாங்குறிச்சி கிராமத்தில் உள்ள கோனார் குட்டையை புனரமைத்தல் . | 44.00 |
| 4 | கிழக்கு மண்டலம், வார்டு எண்34 –க்குட்பட்ட பெருமாள் கோவில் வீதி, க.ச.எண்.931, காளாப்பட்டி கிராமத்தில் உள்ள குட்டையை புனரமைத்தல் . | 64.00 |
| 5 | வடக்கு மண்டலம், வார்டு எண். 28 & 31 –க்குட்பட்ட GKS நகர் முதல் அன்பொழி நகர் வரை க.ச.எண்.151, சரவணம்பட்டி கிராமத்தில் உள்ள கால்வாய் தூர்வாருதல் . | 23.00 |

| | | |
|---|---|---|
| **6** | வடக்கு மண்டலம், வார்டு எண்.**43** –க்குட்பட்ட உருமாண்டம் பாளையத்தில் க.ச.எண்.**364**, வெள்ளகிணறு கிராமத்தில் உள்ள குட்டையை புனரமைத்தல் . | **65.00** |
| **7** | வடக்கு மண்டலம், வார்டு எண். **42** & **43** –க்குட்பட்ட திருமலை நகர் மற்றும் அமர்ஜோதி நகரில் உள்ள கால்வாய் தூர்வாருதல் . | **10.00** |
| **8** | வடக்கு மண்டலம், வார்டு எண். **26** & **27** –க்குட்பட்ட வெள்ளகிணறு மற்றும் குறிஞ்சி நகரில் உள்ள கால்வாய் தூர்வாருதல் . | **10.00** |
| | மொத்தம் | **401.00** |

மேற்படி பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைக்கு, ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.**8023/2021**/எம்.டி.**2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 493 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 31**

கோயம்புத்தூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவு மூலம் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் அபிவிருத்தி பணிகள், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், பூங்கா பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்கனவே பொதுநிதியில் முடிக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.**120.00** கோடிக்கு பட்டியல் தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மாநகராட்சியின் தற்போதைய நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய பணிகள், ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்ட நிலையில் பணிகள் ஏதும் துவங்கப்படாமலும், பிப்ரவரி மாதம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தேர்தல் அறிவிப்பு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மாமன்ற தீர்மானத்திற்கு கோப்புகள் சமர்ப்பிக்கப்படாமலும் உள்ளது.

எனவே, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய பணிகள், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட பணிகள் மற்றும் ஏற்கனவே துவங்கப்படாத பணிகளுக்கு மாநகராட்சியின் தற்போதைய நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு, ரத்து செய்ய வேண்டிய பணிகளின் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | வார்டு எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| **வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்படாத பணிகள்** | | | | | |
| 1 | 86 | 6270/2015/எம்.டி2 | NUHM திட்டத்தின் நிதி உதவியின் கீழ் மற்றும் பொது நிதியிலிருந்து வார்டு எண். **86**க்குட்பட்ட பொன்விழா நகர் பகுதி அருகே புதிய மருத்துவமனை கட்டுதல்.\ | 72.00 | திரு.ஆர் ராஜன் |
| **ஒப்பந்ததாரரை நியமிக்க அனுமதி பெறப்பட வேண்டிய பணிகள்** | | | | | |
| 2 | 16 | 1138/2021/ எம்.டி2 | வார்டு எண்.**16**க்குட்பட்ட மருதமலை பிரதான சாலையில் குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதித்தல். | 70.00 | திரு.ஆர்.உமாபதி |
| 3 | 8 | 978/2021/எம்.டி.2 | வார்டு எண் **8**-க்குட்பட்ட டி.எம்.எஸ் முதல் வீதி, டி.எம்.எஸ் இரண்டாம் வீதி, சுக்கிரகோனார் வீதி மற்றும் சிவாஜி காலனி ஆகிய பகுதிகளில் கான்கிரீட் தளம் அமைத்தல். | 24.50 | திரு.ஏ. செல்வபாண்டி |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்க இயலாமல் நிலுவையில் உள்ளதால், மேற்கண்டுள்ள பணிகளை ரத்து செய்யலாம். மாநகராட்சியில் நிதிநிலை பற்றாக்குறை உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் அத்தியவாசிய பணிகளை கருத்தில் கொண்டும் நிதிநிலையை பொருத்தும், பணிகளை கள ஆய்வு செய்து உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர பணிகள் ஏதேனும் இருப்பின் மாநகராட்சி நிதி ஆதாரம் சீரானவுடன் முன்னுரிமையின் அடிப்படையில் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பொருளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்.6270/2015/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 494 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

**பொருள்:** பாதாள சாக்கடைத் திட்டம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து நிலையம் ஏற்படுத்துதல் – மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்ட ராஜீ நகர் மற்றும் பூங்கா நகர் பொது ஒதுக்கீடு இடங்களில் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க பொது மக்கள் ஆட்சேபணையின் காரணமாக மாற்று இடமாக மாச்சம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி இடத்தில் 2142 ச.மீ பரப்பளவு இடம் தேர்வு செய்யப்பட்டது – தொடர்பாக.

**பார்வை:** நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீர் பிரிவு, குனியமுத்தூர் அவர்களின் கடித எண். 527/F.UGSS-KK/SRO Kmr/JDO/2021, நாள்.18.08.2021.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பபட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடைத் திட்டம் வசதி ஏற்படுத்தும் பொருட்டு, கழிவுநீர் உந்து நிலையம் அமைக்க ராஜீ நகர் மற்றும் பூங்கா நகர் பகுதிகளில் உள்ள பொது ஒதுக்கீடு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டது. இப்பகுதியில் உள்ள பொது மக்கள் தொடர்ந்து ஆட்சேபம் செய்து வந்ததால், மதுக்கரை மற்றும் பேரூர் வட்டாட்சியர் அவர்களின் தலைமையில் பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு தீர்வு ஏற்படாத காரணத்தால், மேற்கண்ட இரண்டு இடங்களுக்கு மாற்றாக குறிச்சி குளக்கரையின் தென்புறப் பகுதியில் அமைந்துள்ள மாச்சம்பாளையம் அரசு மேல் நிலைப்பள்ளிக்காக குனியமுத்தூர் கிராமம் க.ச.எண்.177/4ல் பாராதீனம் செய்யப்பட்டுள்ள (அரசு புறம்போக்கு நிலம்) 3.71 ஏக்கர் பரப்பளவு இடத்தில், முக்கோண வடிவில் பள்ளியின் வடகிழக்கு பகுதியில் தற்போது காலியாக உள்ள 2142 ச.மீ பரப்பளவு இடத்தினை கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க உகந்த இடமாக தேர்வு செய்து மாநகராட்சி பெயருக்கு நிலஉரிமை மாற்றம் செய்து இடத்தினை ஒதுக்கீடு செய்து தருமாறு பார்வையில் காண் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட குனியமுத்தூர் கிராமம், க.ச.எண்.177/4, மாச்சம்பாளையம், அரசு மேல்நிலை பள்ளிகூடம் அமைந்துள்ள வருவாய் ஆவணங்களின் படி பள்ளி கூடம், கல்வி துறை என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில், முக்கோண வடிவில் பள்ளியின் வடகிழக்கு பகுதியில் காலியாக உள்ள 2142 ச.மீ பரப்பளவு இடத்தினை கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க மாநகராட்சிக்கு நிலஉரிமை மாற்றம் செய்து தருமாறும், பணியின் அத்தியாவசியம் மற்றும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்குமாறும் மாவட்ட நிர்வாகத்தினை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.7150/2021/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 495 நாள் 26.10.2021</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென அர்ப்பணிக்கப்பட்ட பில்லூர் இரண்டாவது குடிநீர் வழங்கல் திட்டப்பணியின் கீழ் பில்லூர் அணை பகுதியில் ஒரு தலைமை நீரேற்று நிலையம் நிறுவப்பட்டு, தினமும் சுமார் **125** மில்லியன் லட்சம் லிட்டர் அளவிலான சுத்திகரிப்பு செய்யப்படாத நீர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றுக்குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கூறிய குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.**55.00** லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த **07.10.2020**–ல் கோரப்பட்டது. ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய, தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயமுத்தூர் என்ற நிறுவனத்திற்கு **01.11.2020** முதல் **12** மாதங்களுக்கு ரூ.**55,95,300/–**ல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியானது வரும் **31.10.2021** அன்று முடிவடைகிறது.

இப்பணிக்கான ஒப்பந்தத்தில், பொது விதிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். **9.0** – ஒப்பந்தக்காலம் (Period of Contract) பக்கம் எண். **12**–ல் பிரிவு **9.2**–ல் ஒப்பந்ததாரரின் திருப்திகரமான பணியின் அடிப்படையில் வரடாந்திர பராமரிப்பு கட்டணத்தை ஆண்டுக்கு **5%** சதவீதம் விலை உயர்த்தி அடுத்து வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயமுத்தூர் என்ற நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக செய்து வருகிறது.

இந்நிலையில் தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை வெளியாட்களைக் கொண்டு (Outsourcing) மேற்கொள்ள புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிக்கு புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள்படி புதியதாக மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்திரவு வழங்க கால தாமதம் ஆகும் என்பதாலும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும் **01.11.2021** முதல் மறு ஒப்பந்தப் புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலான காலத்திற்கு, இப்பணியினை தற்சமயம் மேற்கொண்டு வரும் தி/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனமே தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் கடந்த ஆண்டு (**12** மாதங்கள்) வழங்கப்பட்ட தொகையான ரூ.**55,95,300/–** (Including GST 12% ) வழங்கவும் மற்றும் இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். **6661/21**/ஜே.என்.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 496 நாள் 26.10.2021</u>**

ஓப்புதல் வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 34

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த ரூ. **377.13** கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி**3**) துறையின் அரசாணை ( **3** டி ) எண் **25**, நாள்: **24.10.2007**–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதில் சிப்பம் – IV பணியாக மேற்கொள்ளப்பட்ட உக்கடம் பகுதியில் **70** எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி தி/ள். கார்புரே இஞ்சினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ், பி,லிட்., புனே (M/s. GHARPURE ENGG & CONST (P) LIMITED, PUNE) என்ற நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது. இக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டு, இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை கடந்த ஐந்தாண்டுகளாக மேற்படி நிறுவனமே மேற்கொண்டு வந்தது. இந்நிறுவனத்தின் ஒப்பந்த பணிகாலம் கடந்த **07.05.2017**–ல் முடிவடைந்துள்ளது.

எனவே, உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இரண்டாம் கட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அரசின் அனுமதிக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, கடந்த **03.08.2018**–ந்தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.**27454/2017**/UGSS-1–ல், ஓராண்டுக்கு ரூ. **2.43** கோடிக்கு பணிஅனுமதி வழங்கியும், மேலும் ஒப்பந்த நிறுவனத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் வருடாந்திர பராமரிப்பு கட்டணத்தை ஆண்டுக்கு **5%** சதவீதம் உயர்த்தி அடுத்து வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியை ஓராண்டுக்கு மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த **14.09.2018**–ந் தேதி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு/ள்.ஜே.எஸ்.அசோசியேட் டெவலப்மெண்ட் இண்டியா பிரைவேட் லிட், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு கடந்த **02.11.2018**ல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, **03.11.2018** முதல் **02.11.2019** வரை ஓராண்டு காலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் முடிவுற்றது.

இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை நாள்.**03.08.2018** மற்றும் ஒப்பந்தத்தில் பொது விதிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் வ.எண். **7** மற்றும் **8**ல் ஒப்பந்த காலம் (Period of Contract ) பக்கம் எண்.**12**ல் ஒப்பந்ததாரரின் திருப்திகரமான பணியின் அடிப்படையில் **24** மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய (ஒவ்வொரு **12** மாதங்களுக்கும் **5%** விலை உயர்வு ) அறிவுறுத்தப்பட்டது.

உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியை திரு/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனம் கடந்த ஓராண்டு காலமாக திருப்திகரமாக மேற்கொண்டதன் அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து ஆணையர் அவர்களால் கடந்த **24.10.2019** அனுமதி வழங்கப்பட்டது.

இதனடிப்படையில், திரு/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு கடந்த **03.11.2019** முதல் **02.11.2021** வரை இரண்டு ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் தற்சமயம் வரை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியில் எவ்வித சுணக்கமும் இன்றி ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின் படியும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி வரும் **02.11.2021**ல் முடிவடைகிறது. மேற்படி நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக செய்து வருகிறது.

இந்நிலையில் தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை வெளியாட்களைக் கொண்டு (Outsourcing) மேற்கொள்ள புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிக்கு புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் பெறப்பட்டவுடன் புதியதாக மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்திரவு வழங்க கால தாமதம் ஆகும் என்பதாலும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும் **03.11.2021** முதல் மறு ஒப்பந்தப் புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலான காலத்திற்கு, இப்பணியினை தற்சமயம் மேற்கொண்டு வரும் திரு/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனமே தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் கடந்த ஆண்டு (**12** மாதங்கள்) வழங்கப்பட்ட தொகையான ரூ.**2,81,00,520/–** (Including GST 12% ) வழங்கவும் மற்றும் இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்.**9661/21**/ஜே.என்.**4**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 497 நாள் 26.10.2021**

ஒப்புதல் வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 35

கோயம்புத்தூர் மாநகராட்சிப் வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக **17.87** கி.மீ நீளத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP 2021–2022) கீழ் **ரூ.1001.05** இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| **வ. எ ண்.** | **வார்டு எண்** | **பணிகளின் விபரம்** | **நீளம் (கி. மீட்டரில்)** | **அகலம் (மீட்டரில்)** | **மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|---|
| 1 | 14 | மேற்கு மண்டலம் வார்டு எண் 14–க்குட்பட்ட திரு.வி.க நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல். | 0.22 | 4.00 | 16.00 |
| 2 | 14 | மேற்கு மண்டலம் வார்டு எண் 14–க்குட்பட்ட புவனேஸ்வரி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல். | 0.39 | 4.00 | 27.50 |
| 3 | 30 | வடக்கு மண்டலம் வார்டு எண் 30–க்குட்பட்ட மணிவாசகர் வீதி பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.20 | 4.00 | 21.00 |
| | 30 | வடக்கு மண்டலம் வார்டு எண் 30–க்குட்பட்ட மணிவாசகர் வீதி 1 வது குறுக்கு பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.05 | 4.00 | |
| 4 | 30 | வடக்கு மண்டலம் வார்டு எண் 30–க்குட்பட்ட சங்கரா கண் மருத்துவமனை 2 வது வீதி பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.16 | 4.00 | 18.00 |
| | 30 | வடக்கு மண்டலம் வார்டு எண் 30–க்குட்பட்ட சங்கரா கண் மருத்துவமனை 2 வது வீதி, 1 வது குறுக்கு பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.03 | 4.00 | |
| | 30 | வடக்கு மண்டலம் வார்டு எண் 30–க்குட்பட்ட சங்கரா கண் மருத்துவமனை 2 வது வீதி, 2 வது குறுக்கு பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.04 | 4.00 | |
| 5 | 31 | வடக்கு மண்டலம் வார்டு எண் 31 -க்குட்பட்ட ஷாஜகான் நகர் பகுதியில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.29 | 5.00 | 42.00 |
| | 31 | வடக்கு மண்டலம் வார்டு எண் 31 -க்குட்பட்ட ஷாஜகான் நகர் எஸ்–என் சாலை 1 ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.07 | 5.00 | |
| | 31 | வடக்கு மண்டலம் வார்டு எண் 31 -க்குட்பட்ட ஷாஜகான் நகர் எஸ்–என் சாலை 2 ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.07 | 5.00 | |
| | 31 | வடக்கு மண்டலம் வார்டு எண் 31 -க்குட்பட்ட ஷாஜகான் நகர் எஸ்–என் சாலை 3 ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.06 | 5.00 | |
| 6 | 61 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 61-க்குட்பட்ட வெள்ளலூர் சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல் | 0.92 | 8.00 | 99.00 |
| 7 | 64 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 64-க்குட்பட்ட பார்க்ஸ் பள்ளி பிரதான சாலை பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 0.48 | 9.20 | 61.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட சாரமேடு பிரதான சாலை பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.62 | 4.50 | 21.50 |
| 9 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பாத்திமா நகர் 4 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.16 | 4.50 | 6.00 |
| 10 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட ஆப்பிள் கார்டன் பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.78 | 4.50 | 26.50 |
| 11 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட கிரீன் பார்க் வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.46 | 4.50 | 15.80 |
| 12 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 1 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.29 | 4.00 | 25.80 |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 2 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.04 | 4.00 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 3 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.05 | 4.00 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 4 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.05 | 4.00 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 5 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.08 | 4.00 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 6 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.06 | 4.00 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட நியூ போயஸ் கார்டன் 7 வது வீதி பகுதியில் தார்சாலை அமைத்தல். | 0.18 | 4.00 | |
| 13 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட சாரமேடு பிரதான சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 1.23 | 4.50 | 53.50 |
| 14 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட சலாம் முத்து நகர் பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.70 | 4.50 | 31.00 |
| 15 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட வள்ளல் நகர் பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.56 | 4.50 | 25.50 |
| 16 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பிஸ்மி நகர் பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.41 | 4.50 | 19.00 |
| 17 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பூங்கா நகர் பிரதான சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.20 | 4.50 | 31.20 |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பூங்கா நகர் 4 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.10 | 4.50 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பூங்கா நகர் 3 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.09 | 4.50 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பூங்கா நகர் 2 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.11 | 4.50 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பூங்கா நகர் 1 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.19 | 4.50 | |
| 18 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட ராஜூ நகர் 1 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.11 | 4.50 | 13.45 |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட ராஜூ நகர் 2 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.09 | 4.50 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட ராஜூ நகர் 3 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.09 | 4.50 | |
| 19 | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பாத்திமா நகர் 1 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.23 | 4.50 | 28.50 |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பாத்திமா நகர் 2 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.12 | 4.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பாத்திமா நகர் 3 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.16 | 4.50 | |
| | 75 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 75–க்குட்பட்ட பாத்திமா நகர் 5 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.14 | 4.50 | |
| 20 | 53 | மத்திய மண்டலம் வார்டு எண் 53–க்குட்பட்ட சரோஜினி சாலை பிரதான சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.40 | 5.00 | 33.20 |
| | 53 | மத்திய மண்டலம் வார்டு எண் 53–க்குட்பட்ட சித்தநாயுடு பள்ளி சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.13 | 7.00 | 10.00 |
| | 53 | மத்திய மண்டலம் வார்டு எண் 53–க்குட்பட்ட கே.கே நகர் பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.32 | 10.00 | 14.00 |
| | 53 | மத்திய மண்டலம் வார்டு எண் 53–க்குட்பட்ட பகவத் சிங் சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.34 | 8.00 | 22.00 |
| 21 | 51 | மத்திய மண்டலம் வார்டு எண் 51–க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண்.6 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.35 | 5.00 | 19.50 |
| | 51 | மத்திய மண்டலம் வார்டு எண் 51–க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண்.7 விரிவாக்கம் பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.20 | 7.00 | 15.50 |
| | 51 | மத்திய மண்டலம் வார்டு எண் 51–க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண்.9 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.28 | 10.00 | 28.50 |
| | 51 | மத்திய மண்டலம் வார்டு எண் 51–க்குட்பட்ட ஈச்சிபட்டி காலனி (வடக்கு தெற்கு) பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.40 | 8.00 | 6.90 |
| 22 | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் பிரதான சாலை 1 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.22 | 4.20 | 42.50 |
| | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் 1 வது வீதி குறுக்கு சாலை 1 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.08 | 5.10 | |
| | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் 1 வது வீதி குறுக்கு சாலை 2 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.12 | 4.20 | |
| | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் 1 வது வீதி குறுக்கு சாலை 3 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.09 | 4.20 | |
| | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் 1 வது வீதி குறுக்கு சாலை 3–ல் கிராஸ் கட் 1 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.02 | 4.20 | |
| | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் 1 வது வீதி குறுக்கு சாலை 4 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.23 | 4.20 | |
| | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட பிலால் எஸ்டேட் 1 வது வீதி குறுக்கு சாலை 4 – ல் கிராஸ் கட் 1 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.02 | 4.20 | |
| 23 | 86 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86–க்குட்பட்ட சாரமேடு பிரதான சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.45 | 6.60 | 39.50 |
| 24 | 92 | தெற்கு மண்டலம் வார்டு எண் 92–க்குட்பட்ட பி.கே.புதூர் பிரதான சாலை பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.88 | 5.20 | 47.52 |
| 25 | 92 | தெற்கு மண்டலம் வார்டு எண் 92–க்குட்பட்ட முத்துசாமி சேர்வை 1 வது குறுக்கு வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.23 | 4.10 | 22.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 92 | தெற்கு மண்டலம் வார்டு எண் 92–க்குட்பட்ட முத்துசாமி சேர்வை 2 வது குறுக்கு வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.08 | 4.10 | |
| | 92 | தெற்கு மண்டலம் வார்டு எண் 92–க்குட்பட்ட முத்துசாமி சேர்வை 3 வது குறுக்கு வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.07 | 4.15 | |
| | 92 | தெற்கு மண்டலம் வார்டு எண் 92–க்குட்பட்ட முத்துசாமி சேர்வை 3 வது வீதி பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.12 | 4.10 | |
| 26 | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 16 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.22 | 4.00 | 64.24 |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 17 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.06 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 18 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.10 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 19 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.02 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 20 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.10 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 21 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.11 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 22 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.09 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 23 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.23 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 24 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.11 | 4.00 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 25 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.13 | 7.50 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 26 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.05 | 7.50 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95–க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை 27 பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.05 | 7.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் **95–**க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை **28** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.05 | 7.50 | |
| | 95 | தெற்கு மண்டலம் வார்டு எண் **95–**க்குட்பட்ட திருமறை நகர் குறுக்கு சாலை **29** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.06 | 7.50 | |
| 27 | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **1** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.06 | 4.50 | 44.44 |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **2** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.03 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **3** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.04 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **4** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.04 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **5** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.25 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **6** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.04 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **7** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.05 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **8** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.22 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **9** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.02 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **10** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.03 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **11** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.03 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **12** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.06 | 4.50 | |
| | 99 | தெற்கு மண்டலம் வார்டு எண் **99–**க்குட்பட்ட மேட்டு தோட்டம் குறுக்கு சாலை **13** பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.05 | 4.50 | |
| 28 | 85 | தெற்கு மண்டலம் வார்டு எண் **85–**க்குட்பட்ட குப்பன்னன் தோட்டம் பகுதியில் தார்சாலையை புதுப்பித்தல். | 0.33 | 4.50 | 9.00 |
| | | **TOTAL** | **17.87** | | **1001.05** |

மேற்கண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) (2021-22) -ன் கீழ் **17.87** கி.மீ நீளத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.**1001.05** இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதற்கு ஒப்புதல் வேண்டியும் நிர்வாக அனுமதி வேண்டிம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **8093 /2021/எம்டி3**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 498 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 36

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 20 மற்றும் 21-ல் பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடங்களை பராமரிக்கும் பணிக்கு எட்டு மாத காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிகளுக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்த நிலையில் 2021-22-ம் ஆண்டுக்கு புதிதாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 26.02.2021-ம் தேதியில் கோரப்படும் தருவாயில் சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகளின் காரணமாக ஒப்பந்தப்புள்ளி நிறுத்தப்பட்டு, இதுவரை ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமல் உள்ளது. எனவே இப்பணிக்கான மறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி துவங்க கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் , கொரனா நோய் தொற்று உள்ள காரணத்தினாலும், சுகாதாரப் பணியின் அவசர அவசியம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி தினமும் உபயோகபடுத்தி வரும் பொது கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பராமரிக்கும் பணியானது பழைய ஒப்பந்ததாரா்களைகொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே நிர்வாக நலன் கருதி இந்த பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்து பணி துவங்கும் வரையிலான கூடுதல் காலகட்டத்திற்கு, மேற்குறிப்பிட்ட பொது கழிப்பிடங்களை பராமரிப்பதற்கு வேண்டி ஏற்கனவே உள்ள அதே விலைப்பட்டியல் அடிப்படையில பணி செய்ய அனுமதியும், ஏற்கனவே பணி செய்துவரும் ஒப்பந்ததாரா்கள் முலம் பணி மேற்கொள்ளவும், இதுவரை ஒப்பந்தாரா் மூலம் மேற்கொள்ளப்பட்ட அதற்குண்டான செலவீன தொகை மற்றும் கூடுதல் பராமரிப்பு செலவின தொகையை மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## பொது கழிப்பிடம் பராமரிப்பு பணிகளின் விபரம்

| வ. எண் | வார்டு எண் | கோப்பு எண் | வேலையின் பெயர் | மதிப்பட்டுத் தொகை (ரூ.இலட்சத் தில்) | ஒப்பந்தம் முடிவு பெறும் நாள் | ஒப்பந்ததாரா் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 20 & 21 | 4405/2020 / எம்.டி.2 | வார்டு எண் 20 மற்றும் 21-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 19 எண்ணிக்கையிலான பொது கழிப்பிடங்களை 8 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி செய்தல் | 18.50 | 04.04.2021 | S. ராஜு |

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **4405/2020/எம்டி2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 499 நாள் 26.10.2021</u>**

அனுமதிக்கப்பட்டது

---

(ஒப்பம்) ராஜ கோபால் சுன்கரா,
தனி அலுவலா்,
கோயம்புத்தூா் மாநகராட்சி